வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 23.08.2023 புதன்கிழமை | இதழ் : 256 | பக்கங்கள் : 16

# "வானோடு உங்களை கொளுத்தினாலே எங்களுக்கு மனநிம்மதியாக இருக்கும்!"



## மயிலத்தமடு சென்று திரும்பியோரை இப்படி மிரட்டினாராம் பௌத்த பிக்கு!

### 5 மணி நேரம் மறித்து வைத்து அட்டகாசம்



மட்டக்களப்பு, ஓக. 23

**"உங்களை வாகனத்தோடு கொளுத்தினாலே எங்களுக்கு மனநிம்மதியாக இருக்கும்", என்று மயிலத்தடுவுக்கு சென்று திரும்பிய தமிழ் பேசும் சர்வமத தலைவர்கள் குழு மற்றும் செய்தியாளர்களை வழிமறித்து வைத்து பிக்கு ஒருவர் மிரட்டினார் என்று தெரிவிக்கப் பட்டது.**

இதேநேரம், இந்தக் குழுவினரை ஐந்து மணித்தியாலத்துக்கும் அதிகமான நேரம் தடுத்து வைத்திருந்த பிக்கு தலைமையிலான சுமார் 100இற்கும் மேற்பட்ட பெரும்பான்மையினத் தவர்கள் அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மட்டக்களப்பு - பொலநறுவை எல் லைப் பகுதியாக உள்ளது மயிலத்தமடு - மாதவனை. இந்தப் பகுதியை தமிழ் மக்கள் பாரம்பரியமாக மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்தி வந்தனர். கடந்த காலங்களில் இந்தப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதற்கு தமிழ் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இதனிடையே, அங்கே மேய்ச்சலில் ஈடுபடும் தமிழ் மக்களுக்கு சொந்தமான கால்நடைகளை அங்கு குடியேறியவர்கள் சுட்டும் வெட்டியும் கொன்று வந்தனர். அத்துடன், மேய்ச்சலுக்கு மாடுகளை கொண்டு சென்றவர்களையும் தாக்கியும் வந்தனர்.

இது தொடர்பில் தமிழ்மக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்த போதிலும் எந்த

11

## கிணற்று நீரை பாவிப்பவர்கள் அவதானமாக செயல்படுங்கள்

### நீர் வழங்கல் சபை அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 23

கடும் வறட்சி நீடிப்பதால் நிலத்தடி (கிணறு, குழாய்க்கிணறு) நீரைப் பயன்படுத்துவோர் அவதானமாக இருக்க வேண்டும். பயன்படுத்தும் தண்ணீரில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக பரிசோதிக்க வேண்டும் என்று நீர் வழங்கல் சபை அறிவுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு, புத்தளம், அநுராதபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பரிசோத னைக் கூடங்களில் மக்கள் தண்ணீரின் மாதிரிகளை பரிசோதிக்க முடியும்

11

## கப்பலில் கே. கே. எஸ். வரும் பயணிகளுக்கு வசதிகள்!

### ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 23

சென்னையிலிருந்து ஜூன் 16 முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காங்கேசன்துறைக்கு வந்து செல்லும் கோர்டிலியா உல்லாசப் பயணக்கப்பலில் வந்து செல்லும் பயணிகளுக்கான சேவைகளை வழங்குவது தொடர்பில் வட மாகாண சுற்றுலா பணியகம் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸூடன் ஆளுநர் பணிமனையில் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

இந்த உல்லாச பயணக் கப்பல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சென்னையிலிருந்து புறப்பட்டு அம்பாந்தோட்டை, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் தங்கி

11

## துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 36 பேர் மரணம் 28 பேர் காயம்!


கொழும்பு, ஓக. 23

இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை நாடு முழுவதும் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் குறைந்தது 36 பேர் கொல்லப்பட்டனர். 28 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் 60இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் அதிக எண்ணிக்கையிலானவை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு இடையிலான மோதல்களாகும். எவ் வாறாயினும்,

11



## மனிதர்களின் பொறுப்பின்மையால் கால் இழந்து தவிக்கும் பூநாரைகள்!

யாழ்ப்பாணம், ஓக. 24

கால் இழந்த பூநாரை - இடம் வல்வெட்டித்துறை மனிதர்களின் பொறுப்பற்ற செயல்களால் வலசை பறவைகளான பூநாரைகள் (Flamingo - பிளமிங்கோ) கால் இழந்து தவிக்கின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

காட்டுயிர் படப்பிடிப்பு ஆர்வலரான யாழ்ப்பாணத்தை சேர்ந்த எஸ். கே. கோபி என்பவர் தனது முகநூல் பக்கத்தில்

11

## தொடர் காய்ச்சலால் குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 23

ஐந்து நாட்கள் தொடர் காய்ச்சலால் பிறந்து எட்டு நாட்க ளேயான குழந்தை ஒன்று உயிரிழந்தது.

நயினாதீவு முதலாம் வட்டாரத்தை சேர்ந்த மதி வதனன் சுதர்சாவிந்த் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

11

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக்கு புதிய விதிகள்

### மத்திய வங்கி வெளியிட்டது

கொழும்பு, ஓக. 23

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பில் நிதியியல் சேவை வழங்குநர்களால் பின்பற்றப்பட வேண்டிய புதிய ஒழுங்குவிதிகளை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது. இவை எதிர்வரும் 12 மாதகாலத்துக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

11

## நித்திரைக்கு சென்றவர் மறுநாள் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

உணவருந்தி விட்டு படுக்கைக்கு சென்ற இளைஞர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டார். போதை மருந்து பாவனையே இவரின் மரணத்துக்கு காரணம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் - கொட்டடியை சேர்ந்த 30

11

## இப்படியும் நடக்கிறது

சிறியதொரு நகரம். அந்த நகரத்துக்கு ஒரு சட்டமிருந்தது. அதன்படி யார் வேண்டுமென்றாலும் அந்த நகரத்துக்கு ராஜாவாக வரமுடியும். ஆனால், அந்தப் பதவி ஐந்தாண்டுகள் மட்டுமே! ஐந்தாண்டு முடிந்த அடுத்த நாளே மன்னனனை ஆற்றின் கரைக்கு மறுபுறம் உள்ள காட்டில் விட்டு விடுவார்கள்.

அந்தக் காட்டில் மனிதர்கள் கிடையாது. வெறும் கொடிய விலங்குகள் மட்டுமே! மன்னன் காட்டுக்குள் நுழைந்தால் போதும் வனவிலங்குகள் கொன்று தீர்த்து விடும். இந்த சட்டத்தை யாராலும் மாற்ற இயலாது. இந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டவன் மட்டுமே அரியணையில் அமரப் பொருத்தமானவன். ஆக, மன்னனாக முடிசூடிக் கொண்டவனின் தலையெழுத்து ஐந்தாண்டுகளுக்குப் பின் கட்டாய மரணம்.

இந்தக் கடுமையான சட்டத்துக்கு பயந்தே யாரும் அந்தப் பதவிக்கு ஆசைப்படாமலிருந்ததால் அந்த அரியணை பெரும்பாலும் காலியாகவே இருந்தது. இருப்பினும் ஒரு சிலர் 'எப்படியிருந்தாலும் சாகத் தானே போகிறோம் மன்னனாகவே மடியலாமே!' என்று பதவி ஏற்பதுண்டு. அதிலும் பாதி மன்னர்கள் இடையிலேயே மரணத்துக்கு அஞ்சி மாரடைப்பால் மரணமடைவதுமுண்டு.

இப்படி ஒரு மன்னனுக்கு ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம் முடிந்தது. அன்று ஆற்றின் கரையைக் கடந்து காட்டுக்குச் செல்ல வேண்டும். அவனை வழியனுப்ப நாடே திரண்டிருந்தது.

மன்னன் வந்தான், அவன் சிறப்பான ஆடைகளையும் நகைகளையும் அணிந்து, முடிசூடி, தங்க வாளேந்தி வைரங்கள் மின்ன மக்கள் முன் நின்றான். மக்கள் வாயைப் பிளந்தனர் 'இன்னும் அரை மணிநேரத்தில் சாகப் போகிறான் அதற்கு இவ்வளவு அலங்காரமா!'.

தான் செல்லவிருந்த படகைப் பார்த்துவிட்டு சினத்துடன் கூறினான், 'மன்னன் செல்லும் படகா இது! பெரிய படகைக் கொண்டு வாருங்கள்! நான் நின்றுகொண்டா செல்வது! சிம்மாசனத்தைக் கொண்டு வாருங்கள்' என்றான்.

கட்டளைகள் பறந்தன. காரியங்கள் நடந்தன. சற்று நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட அழகான படகு ஆற்று நீரைக் கிழித்துக் கொண்டு மறுகரை நோக்கிப் பயணித்தது.

மக்கள் திகைத்து நிற்க, மன்னன் கையசைக்க பயணம் தொடர்ந்தது.

மிகவும் அதிர்ச்சியடைந்தவன் படகோட்டியே! காரணம், இதுவரை அவன் மறுகரைக்கு அழைத்துச் சென்ற எந்த மன்னனும் மகிழ்ச்சியாக சென்றதில்லை. அழுது, புலம்பி, புரண்டு கொண்டுதான் செல்வார்கள். இவனோ, மகிழ்ச்சிக் களிப்பில் பொங்கி வழிகிறான்.

படகோட்டி பொறுத்துக் கொள்ள முடியாமல் கேட்டான் 'மன்னா! எங்கே செல்கிறீர்கள் தெரியுமா?'

'தெரியும் மறுகரைக்குச் செல்கிறேன்!'

'அங்கே சென்றவர்கள் திரும்ப இந்த நகரத்துக்கு வந்ததில்லை தெரியுமா?'

'தெரியும். நானும் திரும்ப இந்த நகரத்துக்கு வரப் போவதில்லை!'

'பின்னே எப்படி உங்களால் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?'

'அதுவா! நான் என்ன செய்தேன் தெரியுமா? ஆட்சிக்கு வந்த ஓராண்டு முடிவில் ஆயிரம் வேட்டைக்காரர்களைக் காட்டுக்கு அனுப்பினேன் அவர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொன்று விட்டார்கள்!

இரண்டாமாண்டு முடிவில் ஆயிரம் விவசாயிகள் சென்றார்கள் காட்டைத் திருத்தி உழுதார்கள் இன்று ஏராளமான தானியவகைகள் பயிராகியுள்ளன.

மூன்றாமாண்டு முடிவில் ஆயிரம் கட்டடக்கலை வல்லுநர்கள், தொழிலாளர்கள் சென்றனர். இன்று வீடு, வாசல், அரண்மனை, அந்தப்புரம், சாலைகள் எல்லாம் தயார்!

நான்காம் ஆண்டு முடிவில் ஆயிரம் அரசு அதிகாரிகள் சென்றனர். நிர்வாகம் சீரடைந்தது. இந்த 4,000 பேரும் தங்கள் மனைவி, குழந்தைகளுடன் சென்று அங்கே வாழ்கின்றனர்.

இப்போது நான் காட்டுக்குப் போகவில்லை என்னுடைய நாட்டுக்குப் போகின்றேன்! சாகப் போகவில்லையப்பா, வாழப் போகின்றேன்! அதுவும் மன்னனாக ஆளப்போகிறேன்! உனக்கு ஒருவேளை அரண்மனை படகோட்டி வேலை வேண்டுமென்றால், இந்தப் படகோடு இப்படியே வேலைக்கு சேர்ந்துவிடு!' என்றான் மன்னன். படகோட்டி வியப்பில் ஆழ்ந்தான்.

மன்னனின் வெற்றிக்குக் காரணங்கள் யாவை?

ஒன்று : ஐந்து ஆண்டுகளுக்குப் பின் உயிர் வாழவேண்டும் அதுவும் மன்னனாகவே வாழவேண்டும் என்று முடிவு எடுத்தது.

இரண்டு: அந்த முடிவை அடைவதற்காக திட்டமிட்டு உழைத்தது!

இந்தக் கதைதான் அந்தப் பேட்டியைப் பார்த்தபோது ஞாபகத்துக்கு வந்தது.

நமது மூத்த அரசியல்வாதி, மூத்த சட்டத்தரணி, தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறிகாந்தாவின் பேட்டி ஒன்றை காணமுடிந்தது.

இலங்கையின் தலைவர்கள் இராஜதந்திரத்தில் இந்தியாவையே விஞ்சிவிட்டார்கள் என்று சொல்கின்ற சிறிகாந்தா, இலங்கை ஒரு சின்னஞ்சிய நாடாக இருந்தாலும் இன்றைக்கு தென்னிலங்கை தலைவர்கள் இராஜதந்திரமாக காய்களை நகர்த்தி வருகின்றனர் என்று பாராட்டுகிறார். தமிழ் தலைவர்கள் கனவுலகத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் கடிந்து கொள்கின்றார்.

'வடக்கு, கிழக்கில் எமது எண்ணிக்கை குறைந்துவிட்டது. எமது மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் வீசா கிடைத்தால் பலரும் ஓடிப்போய்விடுவார்கள். இன்று மக்கள் மத்தியில் நம்பிக்கை இல்லை. நம்பிக்கை எப்படி வரும், அரசியல் தலைமை இப்படி இருந்தால் நம்பிக்கை எப்படி வரும்?. இன்றைக்கு இருக்கின்ற தலைமைகள். எங்கள் அனைவரையும்தான் சொல்கிறேன். நாங்கள் சீராக இல்லை. ஒன்று, நாங்கள் சீராக செயல்படவேண்டும். அல்லது நாங்கள் வெளியே போகவேண்டும். வரவேண்டியவர்கள் வருவார்கள்...' என்கிறார் சிறிகாந்தா.

நிலைமையைப் புரிந்துகொண்டு யதார்த்தமாக பேசும் சிறிகாந்தா, முதலில் செயலிலும் காட்டவேண்டும். அப்போது வரவேண்டியவர்கள் வருவார்கள் என்று எழுதவேண்டும் போல இருந்தாலும், மேலே சொன்ன கதையில் வரும் மன்னனைப் போன்ற ஒரு தலைவன் வரவேண்டும். இருப்பவர்கள் வழிவிட்டால் வருகின்றவர்களில் ஒருவர் அந்த மன்னனைப் போன்ற ஒருவராகவும் இருக்கலாம்.

**- ஊர்க்குருவி.**

# சிங்கப்பூர் பிரதமருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு



சிங்கப்பூர், ஓக. 23

சிங்கப்பூருக்கு இரு நாள் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் இஸ்தானா மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது சிங்கப்பூர் பிரதமரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. இரு நாட்டு தலைவர்களுக்கும் இடையிலான சிநேக பூர்வ பேச்சுகளை தொடர்ந்து இரு தரப்பு பேச்சுகள் ஆரம்பமாகின.

சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கு இடையில் காணப்படும் ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் தலைவர்கள் அவதானம் செலுத்தினர். அத்துடன், பரந்த பொருளாதார ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசிக் கப்பட்டது.

பெரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6இற்கு அமைய, கார்பன் சீராக்கல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது. சிங்கப்பூர் வர்த்தக மற்றும் கைத்தொழில் நிரந்தரச் செயலாளர்(அபிவிருத்தி) பெக்ஸ்வன் மற்றும் சிங்கப்பூருக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சசிகலா பிரேமவர்தன ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

பெரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6 க்கு அமைய, சர்வதேச காபன் வணிகத்தின் கீழ் பசுமை வீட்டு வாயு வெளியேற்றத்தை மட்டுப்படுத்தும் நோக்கில் இலாபகரமான முறையில் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். அதற்கமையவே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்த்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ் சமரதுங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# நாட்டின் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை



கொழும்பு, ஓக. 23

பல்கலைக்கழகங்களில் தாக்கம் செலுத்தக்கூடிய வகையில் விரிவுரையாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதுடன் ஆசிரியர் பற்றாக்குறை 50 வீதத்தை நெருங்கியுள்ளதாக பேராசிரியர் பரண ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்கலைக்கழகங்களில் 11 ஆயிரத்து 900 ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது 6 ஆயிரத்துக்கும் குறைவானவர்கள்தான் இருக்கின்றார்கள். இந்நிலையால் பல்கலைக்கழக செயல்பாடுகளை தடையின்றி நடத்தி செல்வதற்கு விரிவுரையாளர்கள் பெரும் பணிச்சுமைக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அமைப்பினுள் பணிபுரிந்த விரிவுரையாளர்களின் எண்ணிக்கை இந்த வருடம் ஜனவரி மாதமளவில் 6 ஆயிரத்து 300 ஆகக் குறைந்ததுடன் கடந்த 7 மாதங்களில் மேலும் 500 தொடக்கம் 600 வரையிலான விரிவுரையாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

விரிவுரையாளர்களின் வெளியேற்றத்தால் அரச பல்கலைக்கழகங்கள் மாத்திரமே பாதிக்கப்படுகிறது என்ற பொதுவான எண்ணத்தில் உண்மையில்லை. தனியார் பல்கலைக்கழகங்களும் இதனால் சமனான பாதிப்பை எதிர் கொள்கின்றன. ஏனெனில் நாட்டின் தலை சிறந்த பல்கலைக் கழகங்களில் விரிவுரையாற்றுவதும் அரச பல்கலைக் கழக விரிவுரையாளர்கள்தான்.

மூளைசாலிகள் வெளியேற்றம் செலுத்தும் தாக்கத்தை அரச தனியார் என்று பிரிக்க முடியாது. மூளைசாலிகள் வெளியேற்றத்தைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், எதிர் காலத்தில் நாடு பெரும் பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

மூளைசாலிகள் வெளியேற்றத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாவிட்டாலும் அரசாங்கம் இந்த சந்தர்ப்பத்தில் தலையீடு செய்து அதனைக் குறைப்பதற் கான திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென அவர் தெரிவித்தார்.

விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் வெளிநாடுகளில் மிக இலகுவாக வேலைவாய்ப்புகளைப் பெறக்கூடிய குழுவினராவர். இந்த நாட்டில் அவர் களின் வாழ்க்கைத் தரத்தை முறையாகக் கொண்டு செல்லக்கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்கவில்லையென்றால் நாட்டிலிருந்து வெளியேறுவது அவர்களின் விருப்பமாகும்.

மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதால் சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பைப் போல் , தகுதியுள்ள விரிவுரையாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதால் நாட்டின் கல்வித்துறை யும் பெரும் எதிர்மறையான தாக்கத்தை எதிர் கொள்ளும் - என்றார். (ஐ)

## வடக்கு, கிழக்கில் இன்று அதிக வெப்பம்!

கொழும்பு, ஓக. 23

வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் அதி வெப்பமான கால நிலை இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை நிலவும் என வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த இடங்களில், மனித உடலில் உணரப்படும் வெப்ப சுட்டெண் வெப்பநிலையானது 'எச்சரிக்கை' நிலை வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
23.08.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 6

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சமஷ்டி கோரிக்கையை முன்வைப்பர்கள்

சமஷ்டி கோரிக்கைதான் தமிழரசு கட்சியின் நிலைப்பாடென்று கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்திருக்கின்றார். சமஷ்டி கோரிக்கையை ஒரு நிலைப்பாடாக வைத்திருப்பது பிரச்னைக்கு உரியதல்ல. ஆனால், சமஷ்டி கோரிக்கையை அடைவதற்கான வழிமுறைகளை சொல்லத் தெரியாமல் அதனை ஒரு நிலைப்பாடாக முன்வைப்பதுதான் பிரச்னையானது.

தமிழரசு கட்சியின் சமஷ்டி கோரிக்கை புதியதல்ல. ஆங்கிலத்தில் சமஷ்டி கட்சியென்றுதான் தமிழரசு கட்சி அடையாளப்படுத்தப்பட்டது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஆரம்பத்தில் சமஷ்டி பற்றிப் பேசிய தமிழரசுக் கட்சி - பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியாக தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தது - அதன் பின்னர் - 2009இற்கு பின்னர் மீண்டும் தமிழரசு கட்சியாக சமஷ்டி பற்றிப் பேசிவருகின்றது. ஆனால், தாங்கள் கூறியவற்றை அடைவதற்கு அந்தக் கட்சி என்ன செய்தது - அதனால், என்ன செய்ய முடிந்தது - தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் ஏன் சமஷ்டியை அடைய முடியவில்லை? இந்தக் கேள்விகளுக்கு நேர்மையுடன் பதில் தேடுவதற்கான முயற்சியில் இப்போதும் அந்தக் கட்சியினர் ஈடுபடவில்லை. அவ்வாறானதொரு புரிதல் இருந்திருந்தால் மாவை சேனாதிராசா சமஷ்டி பற்றி சாதாரணமாகப் பேசியிருக்கமாட்டார்.

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தவர்கள் ஏன் மாவட்ட சபை கோரிக்கையை நோக்கி கீழிறங்க வேண்டிவந்தது? இந்தக் கேள்விக்கு மனச்சாட்சியுடன் பதில் தேட முற்பட்டால் தாங்கள் சமஷ்டி கோரிக்கையை இப்போது முன்வைப்பது சரியானதா - அது நேர்மையானதா - என்னும் கேள்விக்கு பதிலை கண்டடைவது மிகவும் சுலபமானது. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறிய செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம் கொள்கையிலிருந்து தடம் புரண்டுவிட்டாரெனக் கூறியே தமிழரசு கட்சிக்கான தேவையை தமிழ் மக்கள் மத்தியில் சந்தைப்படுத்தினார்.

இன்று அதே உத்தியை ஜீ. ஜீயின் பேரன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - தமிழரசு கட்சிக்கு எதிராகக் கைக்கொள்ள முற்படுகின்றார். ஆனால், வடக்கிலும் கிழக்கிலும் எவ்வாறு சமஷ்டி கோரிக்கையை உயர்த்திப் பிடிக்காத - அரசாங்கத்தின் அங்கமாக இருக்கின்ற டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்களால் எவ்வாறு வெற்றிபெற முடிந்தது - என்னும் கேள்விக்கு பதில் தேட இவர்கள் எவருமே தயாராக இல்லை. ஏன் இவர்களின் தலைமைத்துவத்திலிருந்து மக்கள் விலகிச் செல்கின்றனர் என்னும் கேள்விக்கு பதில் தேட இவர்கள் முயற்சிக்கவில்லை.

கஜேந்திரகுமாரின் பிரசாரங்களை எதிர்கொள்ளும் ஓர் உத்தியாகவே எங்களுடைய நிலைப்பாடும் சமஷ்டிதான் - என்று தமிழரசு கட்சியும் கூற முற்படுகின்றது. எவ்வாறு போகும் வழிதெரியாமல் கஜேந்திரகுமார் கற்பனையில் தீர்வைத் தேடுகின்றாரோ அவ்வாறு நாங்களும் கற்பனையில் தீர்வை தேடப் போவதாக தமிழரசு கட்சியும் கூறுகின்றது. ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களை எவ்வாறு தொடர்ந்தும் கற்பனையிலும் போலியான நம்பிக்கையிலும் புதைக்கலாமென்றே அனைவரும் சிந்திக்கின்றனரா?

ஏழை மக்கள், கட்சிகள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையில் சிறிதளவு விசுவாசத்தைக்கூட வாக்களித்த மக்கள் மீது இவர்கள் எவருமே வைக்கவில்லை. சமஷ்டி கோரிக்கையை முன்வைப்பவர்கள் அதற்கான சாத்வீக போராட்டத்தில் தங்களின் அர்ப்பணிப்பை நிரூபிக்க வேண்டும். அவ்வாறானதொரு சாத்வீக போராட்டத்தில் மக்களுக்காக தங்களை இழப்பதற்கு தயாராக இருக்க வேண்டும்.

# நாட்டின் சுகாதாரத் துறையை அரசு திட்டமிட்டு அழிக்கிறது

### எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 23

தற்போதைய அரசாங்கம், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார அமைச்சு என்பன இணைந்து நாட்டின் சுகாதாரத் துறையை திட்டமிட்டு அழிக்கும் சதியில் ஈடுபட்டு வருகின்றன. தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம் மற்றும் மருத்துவ சபை சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவரின் பணிமனையில் மருத்துவர் சங்கங்களுடன் நடந்த சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சட்டங்களில் அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தாம் நம்பினாலும், இந்தச் சட்டங்களை



முற்றாக நீக்குவது என்பது மருந்து மாபியாவுக்கு இடம் கொடுப்பதும், பல்வேறு பல்தேசிய மருந்துக் கம்பனிகள் தலைமையிலான சர்வதேச நிறுவனங்களை நாட்டின் மருந்துக் கொள்கையை கையாள அனுமதிப்பதும் தான் என்றும் குறிப்பிட்டார்.

இந்நேரத்தில், சுகாதாரத் துறை ஒரு பேரழிவாக மாறியுள்ளதாகவும், நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்களால் புத்திசாலிகள் வெளியேற்றம் போலவே மருந்து பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

உயர்தரத்திலான மருந்துகளை நியாயமான மற்றும் மலிவு விலையில் வழங்குவதே ஒரு அரசாங்கத்தின் பொறுப்பு என்றாலும், தற்போதைய அரசாங்கம் கட்டளைச்சட்டங்கள், ஆணைகளை பயன்படுத்தி கொள்முதல் முறைகளை புறக்கணித்து, அமைச்சரினதும் செயலாளரினதும் ஆட்சியாளர்களினதும் விருப்பத்திற்கு ஏற்ப மருந் துத் தொழிலில் ஒரு நட்பு வட்டார முதலாளித்துவத்தை உருவாக்கியுள்ளனர்- என்றார்.

தனது நண்பர்களுக்கு மருந்துப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வர அனுமதியளித்து சந்தையில் வெளியிடுவதற்கும் அனுமதித்து இதன் மூலம் தரம் தாழ்ந்த மருந்து மாபியாவின் செயல்பாட்டை அனுமதித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

(ஐ)

# வாள் உள்ளிட்ட ஆயுதங்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டன

கொழும்பு, ஓக. 23

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, நீதிமன்ற உத்தரவின்படி, கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது கைப்பற்றப்பட்ட வாள்கள், கத்திகள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் படையினரால் ஆழ்கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

ரங்கலை கடற்படைத் தளத்திலிருந்து 17 கடல் மைல் தொலைவில் உள்ள 1,000 அடி ஆழமான கடல் பகுதியிலேயே இவைகள் மூழ்கடிக்கப்பட்டன.

இவற்றில் வாள்களுடன் வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களும் அடங்குகின்றன. கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸின் உத்தரவுக்கமைய, இவைகள் மூழ்கடிக்கப்பட்டன.

(ஐ)

# மதுபான வகைகளின் விலையை குறைக்குக

### இராஜாங்க அமைச்சர் டயானா

கொழும்பு, ஓக. 23

மதுபானத்தின் விலையை குறைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொக்கிசத்தின் மீது நடந்து வந்து கடந்த வருடம் திவாலான நாடு இது என்றும் அவர் கூறினார்.

சுற்றுலா தொடர்பான சட்ட விதிகள் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுற்றுலா இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நூறு மன்னர்கள், ஒரு வாயில் காப்பாளர், ஏழு திருடர்கள் ஆட்சி செய்த நாடு இலங்கை.

தயவு செய்து மதுபானத்தின் விலையை குறைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர், மதுபானங்களின் விலை உயர்வால் மக்கள் வீட்டில் கசிப்பை அருந்துகின்றனர். நாட்டின் கலால் திணைக்களம் 40 வீதம் நட்டத்தை சந்தித்துள்ளதாகவும் கூறினார்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஓகஸ்ட் - 23 புதன்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 06
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சப்தமி




**மேடம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். அதிகாரிகள் உறுதுணையாக இருப்பார்கள்.

**இடபம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். நன்மை கிட்டும்.

**சிம்மம்**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரது விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் வேண்டாம். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**விருட்சிகம்**
ஒரு விஷயம் நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். வியாபாரத்தில் லாபம் வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

# இலங்கை கடற்கொள்ளையர் மீனவர்கள் ஐவரை தாக்கினர்

*நாகபட்டினம், ஓக. 23*

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதில் 5 பேர் காயமடைந்தனர்.

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை சேர்ந்த மீனவருக்கு சொந்தமான விசை படகில் மீன் பிடிக்க ஐவர் சென்றனர்.

ஆற்காட்டுத்துறை கடற்கரையில் இருந்து தென்கிழக்கே சுமார் 22 கடல் மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது 3 கண்ணாடி இழைப் படகுகளில் வந்த 9 இலங்கை கடற்கொள்ளையர்கள் கத்தி, கம்பி மற்றும் கட்டைகளுடன் மீனவர்களின் படகில் ஏறி 800 கிலோ மீன்பிடிவலை, 2 கைபேசி, திசை காட்டும் கருவி, பற்றரி, உள்ளிட்ட சுமார் ஐந்து இலட்சம் (இந்திய) ரூபாய் மதிப்புள்ள பொருட்களை பறித்துக் கொண்டு மீனவர்களை விரட்டி அடித்துள்ளனர்.

கடற்கொள்ளையர்களின் தாக்குதலில் ஐந்து மீனவர்கள் காயமடைந்தனர்.

இலங்கை கடல் கொள்ளையர்கள் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அண்ணாமலை நடைபயணம்; முதல்கட்டம் நிறைவடைந்தது

*சென்னை, ஓக. 23*

அண்ணாமலையின் முதல் கட்ட நடைபயணம் நேற்றுடன் நிறைவடைந்தது. அந்தவகையில், 22 நாட்களில் 41 தொகுதிகளில் நடைபயணம் மேற்கொண்டுள்ளார்.

ஊழலுக்கு எதிராக பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை, நடைபயணம் மேற்கொண்டு வருகிறார். கடந்த, ஜூலை 28ஆம் திகதி இராமேஸ்வரத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நடைபயணத்தை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தனது நடைபயணத்தை அண்ணாமலை நிறைவு செய்துள்ளார்.

தற்போது, திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபயணத்தை மேற்கொண்டு வரும் அண்ணாமலை, தனது முதல்கட்ட நடைபயணத்தை நேற்றுடன் நிறைவு செய்தார். முதல் கட்டமாக 22 நாட்கள் நடைபயணம் மேற்கொண்டுள்ள அண்ணாமலை, 41 தொகுதிகளில் மக்களைச் சந்தித்துள்ளார்.

முதல்கட்ட நடைபயணம் நிறைவடைந்து சென்னை திரும்பும் அண்ணாமலை எதிர்வரும் செப்ரெம்பர் 2ஆம் திகதி வரை கட்சிப் பணிகளில் முழு கவனம் செலுத்துகிறார். பிறகு செப். 3ஆம் திகதி ஆலங்குளத்தில் தனது 2ஆம் கட்ட நடைபயணத்தை அண்ணாமலை தொடங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இலங்கைக்கு கடத்தவிருந்த 1000 கிலோ பீடி இலை சிக்கியது

*தூத்துக்குடி, ஓக. 23*

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஆயிரம் கிலோ பீடி இலைகளை தூத்துக்குடி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தூத்துக்குடி கடலோர பகுதி வழியாக பீடி இலைகள், மஞ்சள் மற்றும் டீசல் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் இலங்கைக்கு கடத்தப்படும் சம்பவங்கள் தொடர்கின்றன.

இந்நிலையில், பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர். இந்நிலையில் தூத்துக்குடி தாளமுத்துநகர் கடற்கரையோர பகுதி வழியாக இலங்கைக்கு பீடி இலைகள் கடத்தப்படவுள்ளன என்று கடலோர பாதுகாப்பு குழும பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் நடவடிக்கையில் இறங்கினர். இதன்போது சிறிய ரக லொறி ஒன்றில் கடத்தப்பட்ட ஆயிரம் கிலோ பீடி இலைகள் பிடிபட்டன. இவற்றின் மதிப்பு 10 இலட்சம் இந்திய ரூபாய் என்று மதிப்பிடப்பட்டது. பொலிஸாரை கண்டதும் கடத்தல்காரர்கள் வாகனத்தை கைவிட்டு தப்பியோடி விட்டனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# தினகரன், பன்னீர் அணியினரை கட்சியில் சேர்க்குமாறு அறிவிப்பு

## ஆட்சியை பிடிக்க பழனிசாமி புதிய நகர்வு

*சென்னை, ஓக. 23*

மதுரை மாநாடு தந்த வெற்றியைத் தொடர்ந்து டி. டி. வி. தினகரன், பன்னீர்செல்வம் அணியினரை அ. தி. மு. கவில் சேர்க்கும் பணிகளை முன்னெடுக்குமாறு எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார் என்று அறிய வருகிறது.

இந்நிலையில், அ.தி.மு.க. மாநாடு வெற்றிகரமாக அமைந்ததில் மிகுந்த உற்சாகத்தோடு காணப்படும் எடப்பாடி பழனிசாமி கட்சியை அடுத்த கட்டத்துக்கு கொண்டு சென்று ஆட்சி கட்டிலில் அமர வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளார்.

இதற்காக பிரிந்து சென்றிருக்கும் அ.தி.மு.க.வினரை மீண்டும் கட்சியில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அவர் மாவட்ட செயலாளர் களை அறிவுறுத்தியுள்ளார் என்று அறிய வருகின்றது.

கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மன்னிப்பு கேட்டு கடிதம் கொடுத்தால் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதை மையமாக வைத்து பிரிந்து சென்றிருப்பவர்களுடன் பேசி அவர்களை மீண்டும் அ.தி.மு.க.வில் சேர்க்கும் பணி நடக்கிறது

மாநாட்டை தொடர்ந்து ஓ. பன்னீர்செல்வம், டி. டி. வி. தினகரன் ஆதரவாளர்கள் கட்சியில் சேர விரும்புகின்றனர் என்று அ. தி. மு. க வின் நிர்வாகிகள் கூறுகின்றனர். இந்நிலையிலேயே அவர்களை கட்சியில் சேர்க்கும் பணிகளை வேகமாக முன்னெடுக்குமாறு பொதுச் செயலாளர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# நம்பிக்கையில்லா பிரேரணையில் பொதுஜன பெரமுன எனக்கு ஆதரவு!

## அமைச்சர் கெஹலிய நம்பிக்கை

கொழும்பு, ஓக. 23

**எனக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்கு பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் பலரும் ஆதரவளிக்க இணக்கம் தெரிவித்துள்ளார்கள் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு கையளித்திருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியினால் சபாநாயகருக்கு கையளித்திருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்காக பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் எனக்கு ஆதரவளிப்பதற்கு இணக்கி இருக்கிறார்கள்.

ஏனெனில் நம்பிக்கையில்லா பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் காரணங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்பது தற்போது விஞ்ஞான ரீதியில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணைக்கு உள்வாங்கி இருக்கும் பிரதான குற்றச்சாட்டான தரமற்ற மருந்து கொண்டுவந்தமை மற்றும் மருந்து ஒவ்வாமை காரணமாக நோயாளர்கள் மரணித்தார்கள் என்ற விடயங்கள் தற்போது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விசேட வைத்திய நிபுணர்களின் பங்குபற்றலுடன் நியமிக்கப்பட்டிருக்கும் தொழிநுட்பக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.



அத்துடன் குறித்த குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனவும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் எனக்கு அறியத்தந்தார்கள்.

அதனால் எனக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை விரைவாக விவாதித்து வாக்களிப்பதற்காக சபாநாயகரிடம் திகதி ஒன்றை பெற்றுக்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கேட்டுக்கொள்கிறேன்.

நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டால் அதற்கு முன்னுரிமை வழங்குவது பாராளுமன்றத்தின் சம்பிரதாயமாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் அந்த சம்பிரதாயத்தை மீறி நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதை காலம் கடத்தி வருகிறார்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகளில் நூற்றுக்கு 90வீதம் இந்தியாவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது.

அதனால் தரமற்ற மருந்து வகைகளை சுகாதார அமைச்சு இறக்குமதி செய்திருப்பதாக எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது என உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது -என்றார். (அ)

# பூகோள அரசியல் மேம்பாடுகள் குறித்து சிங்கப்பூர் அமைச்சருடன் ரணில் பேச்சு!



சிங்கப்பூர்சிற்றி, ஓக. 23

சிங்கப்பூருக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி நெங் எங் ஹென்னை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, பூகோள அரசியல் மேம்பாடுகள் மற்றும் கடல்சார் நாடுகளின் பிராந்திய ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன் தினம் சிங்கப்பூருக்கு பயணமான ஜனாதிபதி விக்கிரமசிங்க, சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலிமா யாக்கோப்பை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் நாளாந்தம் பதிவாகிவரும் இதயநோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 23

இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் இதய நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் சுமார் 170 இதய நோயாளிகள் பதிவாவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட விசேட வைத்தியர் கலாநிதி கோட்டாபய ரணசிங்க இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையில் இதய நோய்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. நாளொன்றுக்கு சுமார் 166-170 பேர் மாரடைப்புக்கு ஆளாகிறார்கள். தற்போதைய தரவுகள் அதைத்தான் நமக்குக் காட்டுகின்றன. இந்த எண்ணிக்கை கடந்த சில வருடங்களில் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. நாம் நோயாளிகளை அன்றாடம் பரிசோதிக்கும் போது மேல் மாகாணத்தில் மாரடைப்பு ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய தரவுகளும் கிடைத்து வருவதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். அந்த தரவுகளை பார்க்கும் போது கடந்த சில வருடங்களில் இதய நோய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை காணலாம்.

இதய நோயாளிகளின் அதிகரிப்புக்கு உணவுப் பழக்கத்தில் உள்ள குறைபாடுகளே பிரதான காரணம்.

நமது வாழ்க்கை முறையால் மாரடைப்பு அதிகரித்துள்ளது. நமது வாழ்க்கை முறையின் மாற்றத்தால். குறிப்பாக நாம் உண்ணும் உணவில் பெரிய மாற்றம் உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக அவை வேகமாக மாறிவிட்டன. நாம் உண்ணும் மற்றும் குடிக்கும் முறை, நமது வாழ்க்கை முறை மிகவும் மாறிவிட்டது. உண்மையில் இலங்கையில் மாரடைப்பு அதிகரிப்பதற்கு இந்த வித்தியாசமே காரணம். குறிப்பாக நாம் உண்ணும் உணவில் உள்ள சீனியின் அளவு மிக அதிகமாக உள்ளது. இலங்கையில் ஒருவர் வருடத்திற்கு சுமார் 30 கிலோ சீனியை உட்கொள்கிறார். மற்றொன்று, நம் உணவின் பெரும்பகுதிக்கு எண்ணெயைப் பயன்படுத்துகிறோம். உண்ணப்படும் பெரும்பாலான உணவுகள் கார்போஹைட்ரேட் ஆகும், அதாவது உணவு முக்கிய காரணியாகும்-என்றார். (அ)

# நாட்டில் தொடரும் மருந்து தட்டுப்பாடு!

கொழும்பு, ஓக. 23

இலங்கையின் சுகாதாரத் துறை கடுமையான சவால்களை எதிர்நோக்கி வரும் நிலையில் தொடர்ந்து 216 மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மருந்துத் தட்டுப்பாடானது குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றமடைந்துள்ள போதிலும் மீதமுள்ள பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்து 216 என்ற குறித்த எண்ணிக்கையை எதிர்வரும் மாதங்களில் 100 ஆகக் கொண்டுவர வேண்டும் எனவும் சுகாதாரத்துறையினர் கூறியுள்ளனர். (அ)

# அரச பொறிமுறையில் மாற்றம் அவசியமாகும்

## வஜிர அபேவர்த்தன வலியுறுத்து

கொழும்பு, ஓக. 23

நாட்டில் ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகளுக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

நாட்டுக்கு சிறந்த எதிர்காலம் வேண்டுமெனில் அரச பொறிமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆசியாவிலேயே மிகவும் வலுவான ஊழலுக்கு எதிரான சட்டத்தை பாராளுமன்றத்தின் மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றி, அதை சட்டமாக உறுதிப்படுத்தி, தேசத்தின் முன்னேற்றத்திற்கான பாதையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காட்டியுள்ளார்.

அனைத்து தரப்பினர்களுடனும் இணைந்து பணியாற்றும் இயலுமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னும் தலைமையிடம் உள்ளது. அவரின் அனுபவங்களை தேசிய நலனுக்காக பயன்படுத்துவதற்கான



சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது.

அதேபோல் பாராளுமன்றத்தில் காணப்படும் அரசியல் ஒற்றுமையின்மை நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது. அதனால் அரசியல்வாதிகளின் பலவீனமாக விளையாட்டுக்களை விடுத்து ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துடன் இணைந்துகொள்ளவேண்டும்-என்றார். (அ)

# பங்களாதேஸுக்கு 50 மில். டொலரை திருப்பிச் செலுத்தியுள்ளது இலங்கை!

கொழும்பு, ஓக. 23

2021 ஆம் ஆண்டு நாணய மாற்று முறையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் 50 மில்லியன் டொலர்களை பங்களாதேஸுக்கு இலங்கை திருப்பிச் செலுத்தியுள்ளது.

இம்மாதம் 17 ஆம் திகதி குறித்த தவணைப்பணம் செலுத்தப்பட்டதாக பங்களாதேஷ் வங்கியின் ஊடக பேச்சாளரும், நிர்வாக பணிப்பாளருமான மெஸ்பால் ஹக், உறுதிப்படுத்தியுள்ளார்.

இரண்டாவது தவணை எதிர்வரும் 30 ஆம் திகதி எதிர்பார்க்கப்படுகிறது என்றும் இந்த ஆண்டுக்குள் இலங்கையிடமிருந்து மொத்தத் தொகையையும் திரும்பப் பெற எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு கடனை திருப்பிச் செலுத்தும் கால அவகாசம் நிறைவடைந்த நிலையில் இந்த ஆண்டு மார்ச் வரை மூன்று மாதங்களில் இரண்டு முறை கால அவகாசம் நீடிக்கப்பட்டது.

இறுதியாக, கடனைத் திருப்பிச் செலுத்த இலங்கைக்கு மேலும் ஆறு மாதங்கள் அதாவது செப்ரெம்பர் வரை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடன் ஒப்பந்தத்தின்படி, செலுத்த வேண்டிய வட்டியை இலங்கை முறையாக செலுத்தி வருவதாக பங்களாதேஷ் வங்கி வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (அ)

# யாரேனும் அடித்தால் நாமும் திருப்பி அடிக்கவேண்டும் என்பது உண்மையே!

## மீண்டும் சபையில் மனோ கணேசன்

கொழும்பு, ஓக. 23

**யாரேனும் அடித்தால் நாமும் அடிக்கவேண்டும் என்பது உண்மைதான் என மீண்டும் கூறியிருக்கிறார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.**

**ரத்வத்த தோட்ட விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-**

அரசுக்கு சொந்தமான ரத்வத்த தோட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தை ஒட்டுமொத்த உலகமும் பார்த்துள்ளது.

இது மலையக மக்களுக்கு மட்டுமன்றி, ஒட்டுமொத்த இலங்கைக்கும் ஏற்பட்டுள்ள அவமானமாகும்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தோட்ட முகாமையாளரை உடனடியாக கைது செய்யுங்கள்.

சம்பவம் இடம்பெற்றபோது அமைச்சர் ஒருவர் அங்கு சென்றார் என இவர்கள் கூறுகிறார்கள். எனக்கும் அங்கு சென்றிருக்க முடியும்.

ஆனால், நான் மனோ கணேசன். சிவாஜி கணேசனோ, ரஜினிகாந்தோ அஜித்தோ அல்லன். நான் சென்று பிழையான முன்னுதாரண மாகிவிடக்கூடாது.

நாம் அனைவருடனும் ஐக்கியத்துடன் வாழ வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். எமக்கு யாரேனும் அடித்தால் நாமும் அடிக்கவேண்டும் என்



பது உண்மைதான்.

போராட்டத்தின்போது வீடுகளுக்கு தீ வைத்தார்கள். இதன்போது நீங்களும் அவர்களுக்கு திருப்பி அடித்தீர்கள் தானே.

எனினும், நாம் யாரையும் திருப்பி அடிக்கவில்லை. இதனால்தான் இந்த சம்பவத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறுகிறோம்.

வெள்ளையர்களிடம் அடிமையாகி இருந்த நாம், இன்று தோட்ட முகாமையாளர்களிடம் அடிமைகளாக உள்ளோம்.

தோட்டங்கள் ஒன்றும் அவர்களுக்கு உரித்தானது கிடையாது. அவர்களுக்கு குத்தகைக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது என்பதை மறந்துவிடவேண்டாம்.

கட்சி பேதங்கள் கடந்து, இந்த சம்பவத்திற்கு தீர்வொன்றை வழங்க வேண்டும்-என்றார். (அ)

# துணிகளுக்குள் மறைத்து 4 கடவுச்சீட்டுக்களை கொண்டு வந்த பெண் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, ஓக. 23

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட உடுதுணிகளுக்குள் மறைத்து 4 கடவுச்சீட்டுக்களை சட்டவிரோதமாகக் கொண்டு வந்த பெண் ஒருவரைக் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

புத்தளம் கற்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 48 வயதுடைய வர்த்தகப் பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று அதிகாலை 04.14 மணியளவில் இந்தியாவின் சென்னையில் இருந்து சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானமான யு.எல்-126 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இந்நிலையில் அவர் கொண்டு வந்த உடுதுணிகளைச் சோதனையிட்டபோதே இந்த 4 கடவுச்சீட்டுகள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஐரோப்பாவுக்கு தப்பிச் செல்வதற்காக இந்த கடவுச்சீட்டுகளை மனித கடத்தல்காரர்களுக்கு வழங்க இந்த வர்த்தக பெண் திட்டமிட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

# ரத்வத்த தோட்ட சம்பவம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## சபாநாயகர் நேற்று உறுதி

கொழும்பு, ஓக. 23

"மாத்தளை, ரத்வத்த தோட்ட சம்பவம் தொடர்பில் பெருந்தோட்டத்துறை அமைச்சர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்." - என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

மாத்தளை, ரத்வத்த தோட்ட சம்பவம் தொடர்பில் நீதி கோரியும், அடாவடியில் ஈடுபட்ட தோட்ட உதவி முகாமையாளரை உடன் கைது செய்யுமாறு வலியுறுத்தியும் தமிழ் முற்போக்கு கூட்டணியினர் உட்பட எதிரணி உறுப்பினர்கள் சபைக்குள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போதே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார்.

"எனது பகுதிகளிலும் தோட்ட நிர்வாகத்தால் இப்படியான சம்பவங்கள் நடக்கின்றன. இவை குறித்து துறைசார் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்." - எனவும் சபாநாயகர் குறிப்பிட்டார். (அ)

# அரவிந்தகுமாரும் கோரிக்கை

கொழும்பு, ஓக. 23

மாத்தளை, ரத்தவத்த தோட்டத்தில் அடாவடியில் ஈடுபட்ட தோட்ட முகாமையாளர் உடன் கைது செய்யப்படவேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பாராளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார்.

"மாத்தளை, ரத்வத்த தோட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தாரிடம் பேச்சு நடத்தினேன். தற்போது தோட்ட நிர்வாகம் சமரசத்துக்கு வரச்சொல்கின்றது. இதற்கு உடன்பட வேண்டாம் எனக் கூறியுள்ளேன். தோட்ட அதிகாரிகள் தன்னிச்சையாக செயற்பட முடியாது. வீடுகளை அடித்து நொறுக்க முடியாது. எனவே, இணக்கப்பாடு அல்ல, குறித்த தோட்ட உதவி முகாமையாளர் கைது செய்யப்பட வேண்டும்." எனவும் அரவிந்தகுமார் குறிப்பிட்டார். (அ)

# ரத்வத்த தோட்ட விவகாரம் பாராளுமன்றில் குழப்பம்!

கொழும்பு, ஓக. 23

மாத்தளை, ரத்வத்த தோட்டத்தில் தோட்ட முகாமையாளரினால் தொழிலாளர்களின் வீடு அடித்து நொறுக்கப்பட்டமைக்கு, நேற்று பாராளுமன்றில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இதன்போது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டவர்கள், குறித்த முகாமையாளருக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

பாராளுமன்றம் நேற்று காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

இதன்போது சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதற்கு முன்னரே, மனோ கணேசன், இராதாகிருஷ்ணன், வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட உறுப்பினர்கள் இணைந்து, மாத்தளை- ரத்வத்த தோட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவத்திற்கு எதிர்ப்பினை வெளியிட்டு கோஷமெழுப்பினர்.

குறித்த தோட்டத்தில் அமைந்துள்ள வீட்டை அடித்து நொருக்கிய தோட்ட உதவி முகாமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, சபையில் இவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, சபாநாயகர் அவர்களை அமைதியாக இருக்குமாறு பல தடவைகள் கேட்டுக்கொண்ட போதிலும், தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிடப்பட்டமையால் சபையில் சிறுது நேரம் பதற்றமானதொரு சூழலும் ஏற்பட்டது. (அ)

# ருமேனியாவில் வேலை தருவதாகக் கூறி ரூ.83 இலட்சத்துக்கு மேல் பணம் மோசடி

## வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளால் ஒருவர் கைது

கொழும்பு, ஓக. 23

முறையான அனுமதிப் பத்திரம் இன்றி ருமேனியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 83 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராஜகிரிய, கலபலுவாவ புட்கமுவ பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ருமேனியாவில் வேலைவாய்ப்பு தருவாதகக் கூறி 813,000 ரூபாவை பெற்று, வாக்குறுதியளித்தபடி வேலை பெற்றுத் தரவில்லை என கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த முறைப்பாட்டிற்கு மேலதிகமாக சந்தேக நபருக்கு எதிராக பணியகத்திற்கு 9 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மேலும் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய அவர் பல்வேறு நபர்களிடமிருந்து 8,390,000 ரூபாவை பெற்றுள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தலா 5 இலட்சம் ரூபா 3 சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிமித்தம் செல்வதற்காக பணம் மற்றும் கடவுச்சீட்டை வழங்குவதற்கு முன்னர் தனிநபர் அல்லது நிறுவனம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# ரத்வத்த தோட்ட சம்பவத்தின் பின்னணியில் எதிரணி எம்.பி.!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஓக. 23

ரத்வத்த தோட்ட சம்பவத்தின் பின்னணியில் எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் உள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சம்பவம் தொடர்பாக சட்டம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் நாமும் உறுதியாக உள்ளோம்.

இந்த சம்பவத்தின் பின்னணியில் எதிர்க்கட்சியின் ஒரு உறுப்பினர் உள்ளார் என்று தகவல் வந்துள்ளது.

எனவே, இதுதொடர்பாக விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட அனைவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறான சம்பவங்கள் நாடளாவிய ரீதியாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால், இதனை வைத்து அரசியல் செய்ய முற்படக்கூடாது.

சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஜீவன் தொண்டமான் அங்கு சென்று நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஆனால், எதிர்க்கட்சியினர் இதனை அரசியலாக்க முற்படுகிறார்கள்-என்றார். (அ)

# ‘13’ அமுலாக இடமளியோம்!

## மொட்டு கட்சி திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 23

**“அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்குவதற்கு ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உடன்படாது. இது விடயத்தில் உறுதியான கொள்கையில்தான் எமது கட்சி உள்ளது.” _ என்று பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**

அத்துடன், குருந்தூர் மலை விவகாரத்தை பயன்படுத்தி நாட்டில் இனவாதத்தை பரப்புவதற்கு தமிழ்க் கட்சிகள் முற்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

“நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்ககூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுவருகின்றன. இப்பிரச்னையை தொடர்வதற்கு இடமளிக்க கூடா என அரசிடம் கூறியுள்ளோம். அதற்கு முடிவு கட்டப்பட வேண்டும்.” எனவும் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே குறிப்பிட்டார்.

“மஹிந்த போரை முடிவுக்கு கொண்டுவந்தார். அதனால் தோட்டப்பகுதிகளில் உள்ள தமிழர்களுக்குகூட அடையாள அட்டை இன்றி நகரப்பகுதிகளுக்கு வரமுடிகின்றது. போர் காலத்தில் அவ்வாறான சூழ்நிலை இருக்கவில்லை. எனவே, இந்நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அச்சமின்றி வாழ்வதற்குரிய சூழலை மஹிந்த ராஜபக்ஷவே ஏற்படுத்திக்கொடுத்தார்.

தமிழ் சகோதரர்கள் அல்லர், தமிழ்க் கட்சிகளுக்கே இனவாதத்தை பரப்ப வேண்டிய தேவை உள்ளது. அதனால்தான் பிரச்னைகளை தோளில் சுமக்கின்றனர். தெற்குக்கும் தவறான சேதியை வழங்குகின்றனர்.

13 ஐ வழங்குவதற்கு எமது கட்சி உடன்படாது. இது விடயத்தில் எமது கட்சியின் கொள்கை மாறவில்லை. இரட்டை நிலைப்பாட்டிலும் நாம் இல்லை. இது சம்பந்தமாக அரசுடன் பேச்சு நடத்தவும் தயாராக உள்ளோம். யோசனைகளும் முன்வைக்கப்படும்.” - எனவும் காமினி லொக்குகே குறிப்பிட்டார்.

(அ)

# கடலில் நீராடச் சென்ற ஒருவரை காணவில்லை!

அம்பாறை, ஓக. 23

பொத்துவில் பகுதியில் கடலில் நீராடச் சென்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

பொத்துவில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

காணாமல் போனவர் பாலமுனை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் காணாமல் போன நபரை தேடும் பணியில் கடற்படை, விசேட அதிரடிப் படை அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் இணைந்து செயற்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனம் வேண்டும்

கொழும்பு, ஓக. 23

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

சிறுவர்கள் வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடும் போது அதிகளவில் வியர்வை வெளியேறுவதால் நீர்ச்சத்து குறைவடையும் வாய்ப்பு உள்ள தாக பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய்கள் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக நீர், இளநீர், தேசிக்காய் சாறு, தோடம்பழம், மாதுளம்பழம், ஜீவனி போன்ற நீராகாரங்களை சிறுவர்களுக்கு அதிகமாக வழங்குமாறும் பெற்றோர்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

# ரத்வத்த தோட்ட சம்பவத்துக்கு அரசு பொறுப்புகூற வேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, ஓக. 23

“மலையக பெருந்தோட்ட மக்களின் உழைப்பால்தான் இந்நாட்டுக்க டொலர் வருமானம் கிடைக்கின்றது. ஆனால் அவர்களுக்கு உரிய கவனிப்பு இல்லை.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“மாத்தளை, ரத்வத்த தோட்டத்தில் அப்பாவி மக்களை தோட்ட உதவி முகாமையாளர் ஒருவர் தனது அடியாட்களுடன் சென்று விரட்டியுள்ளார். தற்காலிக குடியிருப்பையும் அடித்து நொறுக்கியுள்ளார்.

இது தவறான செயலாகும். அரச தோட்டமொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை பயங்கரமாகும். இதற்கு அரசு பொறுப்பு கூறவேண்டும்.

தோட்ட மக்களுக்கு நிதியை வழங்க அரசு முன்வரவில்லை. அதிகாரிகள் மட்டுமல்ல அமைச்சரும் இச்சம்பவத்துக்கு பொறுப்புகூற வேண்டும்.”-எனவும் சஜித் வலியுறுத்தினார். (அ)

# பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்குவதில் நெருக்கடி நிலை!

கொழும்பு, ஓக. 23

நலன்புரி நன்மைகள் சபையின் தலைவரை நியமிக்காமையினால் பயனாளிகளுக்கான கொடுப்பனவை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொடுப்பனவை செலுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கு நலன்புரி நன்மைகள் சபை கூட்டப்பட வேண்டும் என சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கமல் பத்மசிறி தெரிவித்தார்.

எனினும், தலைவர் ஒருவர் நியமிக்கப்படாமையினால் கொடுப்பனவை வழங்குவதற்கான அனுமதியை வழங்க முடியாமல் போயுள்ளது.

குறித்த சபையின் தலைவராக செயற்பட்ட பி.விஜேரத்ன கடந்த சில நாட்களுக்கு முன்னர் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

அதனடிப்படையில், புதிய தலைவராக ஜயந்த விஜேரத்னவை நியமிக்குமாறு அரசியலமைப்பு பேரவைக்கு ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை அரசியலமைப்பு பேரவை வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனிடையே, நலன்புரி நன்மைகள் சபையினால் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெயர் பட்டியலில் சமுர்த்தி பயனாளர்கள் பலரின் பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை என சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர், கமல் பத்மசிறியிடம் வினவிய போது விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத பலரின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (அ)

# புராதன சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை

## அமைச்சர் விதுர விக்ரமநாயக்க

கொழும்பு, ஓக. 23

நாட்டின் புராதன சின்னங்களை எதிர்க்கால சந்ததியினருக்கு பாதுகாப்பாக கையளிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு, குருந்தூர் மலை விவகாரம் தொடர்பாக இரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.



இந்த விவகாரம் தொடர்பாக விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் கூறப்போகும் கருத்துக்கள், அந்த வழக்குகளுக்கு சாதகமாவோ பாதகமாகவோ கூட மாறலாம்.

எனவே, வழக்கு விசாரணைகள் இடம்பெறும் ஒரு விடயம் தொடர்பாக என்னால் பாராளுமன்றில் கருத்து கூற முடியாது.

இந்த நாட்டை பொறுத்தவரை புராதனச் சின்னங்கள், நாடளாவிய ரீதியாக பல இடங்களில் காணப்படுகின்றன.

பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதத்திற்கு இவை உரியதா என்பதல்ல பிரச்னை.

இந்தப் புராதனச் சின்னங்களின் பெருமையை நாட்டுக்கு மட்டுமன்றி, முழு உலகிற்கும் காண்பிக்கவேண்டும்.

எதிர்க்கால சந்ததியினருக்கு இதனை நாம் இவற்றை பாதுகாப்பாக ஒப்படைக்கவேண்டும்.

இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ளத் தயாராக உள்ளோம்- என்றார். (அ)

# இலங்கைக்கு படையெடுக்கும் இந்திய சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, ஓக. 23

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் இந்தியாவிலிருந்து வரும் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த மாதத்தின் முதல் 20 நாள்களில் மாத்திரம் 15 ஆயிரத்து 330 இந்திய சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வருகைத்தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டிற்கு வருகைத்தந்துள்ள சுற்றுலாப்பயணிகளின் மொத்த எண்ணிக்கை 89ஆயிரத்து 724 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரித்தானியாவிலிருந்து, 10 ஆயிரத்து 184 பேரும், சீனாவிலிருந்து 5 ஆயிரத்து 963 பிரஜைகளும் நாட்டிற்கு வருகைத்தந்துள்ளனர்.

மேலும், ஜேர்மனியில் இருந்து 5 ஆயிரத்து 141 பேரும், ரஷ்யாவில் இருந்து 4 ஆயிரத்து 561 சுற்றுலாப்பயணிகளும் நாட்டிற்கு வருகைத்தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# 7 மாதத்தில் 600 பேராசிரியர்கள் நாட்டில் இருந்து வெளியேற்றம்!

கொழும்பு, ஓக. 23

கடந்த 7 மாத காலப்பகுதியில் மாத்திரம் பல்கலைக்கழகங்களின் 600 பேராசிரியர்கள் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளனர்.

பல்கலைக்கழக பேராசியர்கள் சம்மேளனத்தின் தலைவர் பரண ஜயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கட்டமைப்பில் , 12 ஆயிரம் பேராசிரியர்கள் இருக்க வேண்டும் என்கின்ற போதும் 6 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே கடமையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தை செயல்படுத்துவதில் டக்ளஸ் தீவிரம்!

காரைதீவு, ஓக. 23

**கிழக்கு கடற் பரப்பில் ஏராளமான கடலுணவு சார்ந்த வளங்கள் காணப்படுகின்றபோதிலும், இதுவரையில் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஒலுவில் துறைமுகத்தில் மீன்பிடிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் குறித்த குறைபாட்டினை கணிசமானளவு நிவர்த்தி செய்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.**



கிழக்கிற்கான விஜயத்தினை கடற்றொழில் அமைச்சர் விரைவில் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ள நிலையில், ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பான ஏற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாக நேற்று முன் தினம் திங்கட்கிழமை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டமையினால் அயல் கிராமங்களில் கடலரிப்பு அதிகரித்துள்ளதாகவும், துறைமுகத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுமாயின், கடலரிப்பு வேகம் மேலும் அதிகரிக்கலாம் எனவும் சில தரப்புக்களினால் அச்சம் வெளியிடப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த விடயம் தொடர்பாக ஆய்வு ரீதியான அறிக்கைகளை பெற்று, அதனடிப்படையில் வேலைகள் ஒழுங்குபடுத்தப்படுவதுடன், பிரதேச மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டியதும் அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் வேளாண்மை அறுவடை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (அ)

## 38 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் அதிரடிப்படையினரால் கைது

காரைதீவு, ஓக 23

அக்கரைப்பற்று பனங்காடு மகாசக்தி கிராமம் பகுதியில் வைத்து 38 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒரு சந்தேகநபரை நேற்று முன் தினம் திங்கட்கிழமை திருக்கோவில் விசேஷ அதிரடி படையினர் கைது செய்தனர்.

அவரிடம் இருந்து ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதன் காரணமாக அவரை 72 மணித்தியாலங்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அறிக்கையினை அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது, அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம் முகமட் ஹம்சா சந்தேக நபரை 72 மணித்தியாலங்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கினார். (அ)

## நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு உணவகங்களில் திடீர் சோதனை

காரைதீவு, ஓக. 23

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம். நயீஸ் வழிகாட்டலில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவு உணவகங்களில் திடீர் சோதனை இடம்பெற்றது.

தற்போதைய காலகட்டத்தில் ஹோட்டல்களின் தரத்தைப் பேணும் வகையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் உணவகங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மேலும், இதில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற நீரில் கழுவாமல் வெட்டப்பட்ட வெங்காயம் மற்றும் சீர்குலைந்து காணப்பட்ட பாத்திரங்கள் மற்றும் ஒரு தடவை உபயோகித்த பின்னர் மீள்பாவனைக்காக வைக்கப்பட்ட எண்ணெய்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. (அ)

# கல்முனை மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு

காரைதீவு, ஓக. 23

தேவை உடைய 15 பல்கலைக் கழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு கல்முனை தாராள உள்ளங்கள் அறக்கட்டளை அமைப்பினால் மாதாந்த கொடுப்பனவு கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.சந்திரகுமார் பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதியாக நன்கொடையாளரும் தாராள உள்ளங்கள் அறக்கட்டளையின் மகளிர் பிரிவு தலைவியுமான திருமதி.ஷரேன் பியுமி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)



## கல்முனை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பி வழங்கல்



காரைதீவு, ஓக. 23

கல்முனை றோட்டறிக் கழகத்தின் 2023/2024 ஆண்டிற்கான தலைவர் றோட்டேரியன் ஏ.எல்.ஏ. நாசர் தலைமையில் கல்முனை கல்வி மாவட்ட பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இவையாவும் அவுஸ்திரேலியா கன்பரா வெஸ்டர்ன் கிறிக் றோட்டறிக்கழகம் பிரதிநிதி றோட்டேரியன் த.ரவீந்திரன் முன்னிலையில் வழங்கப்பட்டன.

இவ் வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக நேற்று முன்தினம் மூன்று பாடசாலைகளுக்கு, திராய்க்கேணி அ.தி.மு.க.க பாடசாலை, கோளாவில் விநாயகர் வித்தியாலயம், மற்றும் மாணிக்கமடு அதக பாடசாலை ஆகியவற்றிற்கு 155,000 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்விற்கு செயலாளர் றோட்டேரியன் கே. குகதாசன், சமூக சேவைகள் பணிப்பாளர் றோட்டேரியன் மு.சிவபாதசுந்தரம், றோட்டேரியன் மா. சிதம்பரநாதன் மற்றும் உறுப்பினர் றோட்டேரியன் என். றதீசன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# நாவிதன்வெளி கோட்டம் முதலிடம்!

காரைதீவு, ஓக. 23

சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் 469 புள்ளிகளைப் பெற்று நாவிதன்வெளிக் கோட்டம் முதலிடத்தை சுவீகரித்துக்கொண்டது.

இரண்டாம் இடத்தை 435 புள்ளிகளைப் பெற்ற சம்மாந்துறை கோட்டமும், மூன்றாம் இடத்தை 183 புள்ளிகளைப் பெற்ற இறக்காமம் கோட்டமும் பெற்றுக்கொண்டன.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் தலைமையில் இடம் பெற்ற போட்டியில் துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

நாவிதன்வெளி கோட்டத்தில் 171 ஆண்களும் 298 பெண்களும் இந்த 469 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர். சம்மாந்துறை கோட்டத்தில் 195 ஆண்களும் 240 பெண்களும் 435 புள்ளிகளைப் பெற்றனர்.

இறக்காமம் கோட்டத்தில் 183ஆண்கள் 183 புள்ளிகளை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அங்கு பெண்கள் கலந்து கொள்ளவில்லை.

போட்டிகள் யாவும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# புதிய செயற்கைக் கோளை விண்ணில் செலுத்திய சீனா

பீஜிங், ஒக. 23

சீன நிறுவனம் புதிய செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் செலுத்தியது.

விண்வெளி ஆராய்ச்சியில் முன்னிலை வகிக்கும் வகையில் சீனாவின் சமீபத்திய திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

சீனா தனக்கென்று புதிய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்குவது, நிலவுக்கு மனிதனை அனுப்புவது என புரட்சிகர திட்டங்களை வகுத்து செயல்படுகிறது.

மேலும் தனது ரொக்கெட்டுகளை கொண்டு செயற்கைக் கோள்கள் ஏவி விண்ணகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்து வருகின்றது.

அந்த வகையில் காலநிலை கண்காணிப்பு, அனர்த்த மேலாண்மை குறித்து மேம்பட்ட தகவல்களை பெறும் வகையில் சீன நிறுவனம் புதிய செயற்கைக் கோள் ஒன்றை விண்ணில்



செலுத்தியது.

ஜியுகுவான் ஏவுதளத்தில் இருந்து லாங் மார்ச்-4சி என்னும் ரொக்கெட் கோபேன் -12 04 என்ற செயற்கைக்கோளை சுமந்தப்படி வானிற்குள் பறந்தது.

பின்னர் திட்டமிட்டபடி அதன் சுற்று வட்டப்பாதையில் செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்பட்டது.

நில அளவீடு, நகர்புற வளர்ச்சியை தீர்மானம், விளைபொருட்கள் மதிப்பீடு உள்ளிட்ட திட்டங்களுக்கு இந்த செயற்கைக்கோள் பயன்படவுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (அ)

## பாடசாலைகளை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த லெபனான் ஆயுதக் குழு



பெய்ரூட், ஒக. 23

மிகப்பெரிய பாலஸ்தீன அகதிகள் முகாமான ஐன் அல்-ஹெல்வேயில் ஆயுதம் ஏந்திய குழுவினர் 7 பாடசாலைகளை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு லெபனானில் உள்ள பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. விவகார அலுவலகம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் என்பதால் உடனடியாக அந்த பாடசாலைகளை விட்டு வெளியேறுமாறு ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உதைபந்து ரசிகர்கள் பயணித்த பேருந்து விபத்து; 7 பேர் பலி!



### 27 பேர் படுகாயம்

பிரேசிலியா, ஒக. 23

பிரேசில் ஹறிசோன்டே பகுதியில் இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியை காண ஏராளமான உள்ளூர் ரசிகர்கள் திரண்டனர். போட்டி முடிந்ததும் ஒரு பஸ்சில் 40 ரசிகர்கள் வீடு திரும்பினார்கள். அந்த பஸ் மலைப்பகுதியில் சென்று கொண்டிருந்தது.

அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் தாறுமாறாக ஓடி வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் இடிபாடுகளில் சிக்கி 7 இரசிகர்கள் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். 27 பேர் படுகாயம் அடைந்தனர்.

இது பற்றி அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். காயத்துடன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த 27 பேரை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## ஏழு குழந்தைகளைக் கொடூரமாக கொலை செய்த தாதிக்கு ஆயுள் சிறை

லண்டன், ஒக. 23

பிரித்தானியாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த 'ஏழு குழந்தைகளைக் கொடூரமாகக் கொலைசெய்த தாதியின் வழக்கில்' ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரித்தானியாவில் உள்ள பிரபலமருத்துவ மனையொன்றில் கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டுக்குள் பல குழந்தைகள் வழக்கத்திற்கு மாறாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு இறந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இச்சம்பவத்தினைத் தொடர்ந்து கடந்த 2019ஆம் ஆண்டு இது குறித்த தீவிர விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டனர். இச் சம்பவத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மருத்துவர் ரவி ஜெயராம் என்பவர் லூசி லெட்மி என்ற செவிலியர் மீது சந்தேகத்தை எழுப்பினார்.

இதனையடுத்து பொலிஸார் லூசியின் வீட்டை சோதனை செய்த போது உயிரிழந்த குழந்தைகளின் மருத்துவ அறிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் உடல்நிலை சரியில்லாமல் பிறந்த குழந்தைகள்



மற்றும் குறை பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கு லூசி அதிக அளவு பால் கொடுத்தும், இன்சுலின் மூலம் விஷத்தினை உட்செலுத்தியும், இரத்தத்தில் காற்றைக் கலந்தும் கொலை செய்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு ஏழு குழந்தைகளை அவர் கொலை செய்ததற்காகவும் ஆறு குழந்தைகளை கொலை செய்ய முயற்சித்ததற்காகவும் அவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

இச்சம்பவமானது உலகைவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் நேற்று முன்தினம் இவ்வழக்கின் தீர்ப்பு வெளியாகியிருந்தது.

அந்தவகையில் அவருக்கு ஆயுள் தன்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் இதற்கு முன்பு மூன்று பெண்களுக்கு மாத்திரமே இத்தகைய சிறை தண்டனை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆளில்லா விமானங்களை இயக்க ரஷ்யாவில் மாணவருக்கு பயிற்சி!

மொஸ்கோ, ஒக. 23

ரஷ்யாவில் பாடசாலை மாணவர்களுக்கு ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கான பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இதன்படி 15 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கே இவ்வாறு பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு எதிரான போரினை அடிப்படையாக கொண்டு இந்த நடவடிக்கையினை ரஷ்யா முன்னெடுத்துள்ளது.

கடந்த ஆண்டு, உக்ரைன் போருக்கு மத்தியில் 2023 முதல் மாணவர்களுக்கு சோவியத் பாணியில் இராணுவப் பயிற்சியை மீண்டும் அறிமுகப்படுத்துவதாக மொஸ்கோ அறிவித்தது.

பாடசாலைகளில் இதுபோன்ற



ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவது, எதிரியுடனான மோதலுக்கு மக்களை முறையாக தயார்படுத்துவதை சாத்தியமாக்கும் என அந்நாட்டு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (அ)

## டிக்டொக், டெலிகிராம்களுக்கு தடை விதித்தது சோமாலியா!

மொஹடிசு, ஒக. 23

சமூக ஊடகங்களான டிக்டொக், டெலிகிராம் மற்றும் ஒன்லைன் சூதாட்ட இணைய தளங்களுக்கு சோமாலிய அரசாங்கம் அதிரடியாக தடை விதித்துள்ளது.

ஒழுக்கமின்மையை பரப்பும் பயங்கரவாதிகள் மற்றும் சில குழுக்கள், சமூகத்தை தவறாக வழிநடத்துவதற்கு இத்தகைய தளங்கள் உதவியாக இருப்பதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இன்னும் ஐந்து மாதங்களுக்குள் நாட்டின் பெரும் பகுதியைக் கட்டுப்படுத்தும் அல்-ஷபாப் போராளிக் குழுவை ஒடுக்கும்



வகையில் சோமாலியா இந்த அறிவிப்பை வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே ஒகஸ்ட் 24 ஆம் திகதிக்குள் இந்த தடையை இணைய சேவை வழங்குநர்கள் அமுல்படுத்த வேண்டும் என்றும் இல்லை என்றால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது. (அ)

# அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவது கஷ்டமானது

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

கொழும்பு, ஓக. 23

**இவ்வளவு பிரச்சினைகளிற்கு மத்தியில் அரசாங்கத்தில் செயற்படுவதில் எனக்கு மிக கஸ்டமாகத்தான் உள்ளது. ஏனெனில், எனக்கு எந்தவித உதவியும் இல்லை என அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டான் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

மாத்தளை எல்கடுவ பிரதேசத்தில் தோட்ட குடியிருப்பை உடைத்து அட்டகாசம் செய்ய விவகாரம் பற்றி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி 11ஆம் திகதி கலந்துரையாடலுக்கு அழைத்தார். தமிழ் முற்போக்கு கூட்டணியினர் அன்று வந்திருந்தால் எவ்வளவோ பிரச்னைகளை பேசி தீர்த்திருக்கலாம். அன்று அரவிந்தகுமார் வந்திருந்தார்.

நாம் என்ன செய்தால் மலையகத்தை ஒன்றிணைக்க முடியுமென்பதை உங்கள் தரப்பிலிருந்து சொல்லுங்கள். மேடையில் ஏறவேண்டுமென்றீர்கள். உங்கள் மேடையில் ஏறினேன். அது கூட பலருக்கு விருப்பமில்லை. நீங்கள் எனக்குரிய மரியாதையை தந்தீர்கள். ஆனால் போகப்போக பிரச்னைகள் வந்தன. கண்டி மாவட்ட உறுப்பினர் (வேலுகுமார்) இங்கிருக்கிறார். அவருக்கும் எமக்கும் என்ன பிரச்னையென எனக்கு தெரியவில்லை. சம்பந்தமேயில்லாமல் எம்மை தாக்க தொடங்கினார். அப்போதுகூட பொறுமையாக இருந்தோம்.

பின்னர் நுவரெலியா மாவட்ட உறுப்பினர் உதயகுமார் எம்மை தாக்கினார். வீட்டு திட்டத்தில் பிரச்னையென்றார். கணக்கு தப்பு என கோபப்பட்டேனே தவிர அவர் மீது எனக்கு பாசமுள்ளது.

உண்மையிலேயே சொல்கிறேன், இவ்வளவு பிரச்னைகளுக்கு மத்தியில் அரசாங்கத்தில் செயற்படுவதில் எனக்கு மிக கஸ்டமாகத்தான் உள்ளது. ஏனெனில், எனக்கு எந்தவித உதவியும் இல்லை. நீங்கள் எல்லோரும் மூத்தவர்கள். நீங்கள் முன்பாக வந்து கொஞ்சம் உதவிபுரிந்தால், இதை முன்னால் கொண்டு செல்ல முடியும்.

எனக்கு அரசியல்தான் வாழ்க்கையென இல்லை. அரசியலால் நாங்கள் நிறைய பட்டுவிட்டோம்.

மாத்தளை சம்பவம் எனது ஆதங்கம்தானே தவிர, அதில் போய் அரசியல் செய்யும் நோக்கமில்லை. நான் வன்முறையாக நடந்தது எனது இயலாமையினால் என்கிறீர்கள். வேறு என்ன செய்வது. ஒவ்வொரு தோட்டத்திலும் இந்த பிரச்னைகள் இன்று உள்ளன.

வடிவேல் சுரேஸ் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அவர் ஜனாதிபதியுடன் நெருக்கமானவர். அப்படியிருக்க, இப்படி கறுப்புச் சட்டை போட்டு வந்து, எதிர்க்கட்சியிலிருந்து 4 வருடங்கள் என்னதான் செய்யப் போகிறீர்கள்? உங்களுடைய அனுபவம் எங்களுக்கு தேவை. அதனால்தான் சொல்கிறேன், எதிர்கட்சித் தலைவரை விட்டுவிட்டு வாருங்கள்.

நாங்கள் சிறுபான்மையினர் எனத்தான் பார்க்கிறார்கள். நாங்கள் இலங்கையர்களாக மாற வேண்டும்-என்றார்.

(அ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்

கொழும்பு, ஓக. 23

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது நெல் சந்தைப்படுத்தல் சபையினரால் நெல் கொள்வனவு செய்யப்பட்டு வரும் நிலையில் விவசாயிகள் தம்மிடம் உள்ள நெல்லை நெல் சந்தைப்படுத்தல் சபையினர் ஊடாக விற்பனை செய்வதற்கு ஆர்வம் காட்டவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

நெல்சந்தைபடுத்தல் சபை உத்தியோகபூர்வமாக விவசாயிகளுக்கு தகவல் வழங்கியும் விவசாயிகள் நெல்லை சந்தைப்படுத்தல் சபையினரிடம் விற்பனை செய்வதற்கு முன்வரவில்லை.

அந்த வகையில் கிளிநொச்சி மற்றும் கண்டாவளை நெல் களஞ்சியத்தின் ஊடாக நெல் சந்தைப்படுத்தல் சபையினர் வெள்ளை நெல்லினங்களை மட்டுமே ஒரு கிலோ 95 ரூபாய் கொடுத்து விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து வருகின்றனர்.

தற்பொழுது சிறுபோக அறுவடை முடிவடையும் நிலையில் நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது. ஆனாலும், நெல்லுக்கான விலை போதாது என கருதி விவசாயிகள் சந்தைப் படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# வறட்சியான காலநிலையால் நாட்டில் 248,531 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 23

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையினால் இது வரை 72 ஆயிரத்து 100 குடும்பங்களை சேர்ந்த 2 இலட்சத்து 48 ஆயிரத்து 531 பேர் பாதிப்படைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வறட்சியின் காரணமாக சுத்தமான குடிதண்ணீரின்றி மக்கள் பாரியளவில் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

அதன்படி, வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் 22 ஆயிரத்து 449 குடும்பங்களைச் சேர்ந்த 71 ஆயிரத்து 358 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டகளப்பு, அம்பாறை மாவட்டங்களில் 18 ஆயிரத்து 992 குடும்பங்களை சேர்ந்த 63 ஆயிரத்து 269 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
30 - 06 - 1944

**மறைவு**
01 - 08 - 2023

## விமல் சொக்கநாதன்

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கை வானொலி, பி.பி.சி. தமிழோசை முன்னாள் ஒலிபரப்பாளரான, வழக்கறிஞர் விமல் சொக்கநாதன் கடந்த 01.08.2023 அன்று காலமானார்.

அன்னார், யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பு சொக்கநாதன் – விமலா சொக்கநாதன் தம்பதியரின் புதல்வரும், வழக்கறிஞர் பத்மா சொக்கநாதனின் அன்புக் கணவரும், ஜானோ ஆல்பர்ட் – விமல் அவர்களின் அன்புத் தந்தையும் ஜூலியன் சுரேஷ் ஆல்பர்ட்டின் மாமனாரும், ருக்மிணி ஜோவின் அன்புத் தாத்தாவும், யோகா தில்லைநாதன், காலஞ்சென்ற டாக்டர் ரவி சொக்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆறுமுகம் தில்லைநாதன், சுஜாதா சொக்கநாதன் ஆகியோரின் மைத்துனரும், ராஜீவ் தில்லைநாதன், துளசி சுதந்திரகுமார், துவாரகா தில்லைநாதன், டாக்டர் சஞ்சீவ் சொக்கநாதன், ஜீவப்ரியா சொக்கநாதன் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையாரும் ஆவார்.அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (24.08.2023) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்**

Funeral Service Time:
09:00am
Addington Palace
'Gravel Hill' CRO 5BB

Cremation Time:
12:00pm
East Chapel
Croydon Crematorium
CR9 3AT

# தலைமன்னார் விபத்தில் இளைஞர் மரணம்

மன்னார், ஓக. 23

மன்னார்- தலைமன்னார் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

தலைமன்னாரில் இருந்து ஊர்மனை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் ஊர்மனையிலிருந்து மன்னார் நோக் கிச் சென்ற வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து நேர்ந்துள்ளது.

தலை மன்னார் ஊர்மனை யைச் சேர்ந்த லோறன்ஸ் மனோ கரன் நிசாந்தன் (வயது- 32) என்பவரே விபத்துக்குள்ளாகிள சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் தற்போது மன்னார் பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# தங்க நகைகள் கொள்ளையிடும் கும்பலை வழிநடத்திய இருவர் மட்டக்களப்பில் கைது

மட்டக்களப்பு, ஓக. 23

மட்டக்களப்பில் மரியாள் தேவாலய திருவிழாவின்போது பெண் ஒருவரின் தங்க சங்கிலியை அறுத்தெடுத்த சம்பவம் தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கொள்ளைக் குழுவைச் சேர்ந்த 3 பெண்கள் குழுவினை இயக்கி வந்த வாழைச்சேனை, திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த 2 ஆண்களை கடந்த சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அருகில் வைத்து மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி மட்டக்களப்பு மரியாள் தேவலாயம் மற்றும் மாமாங்கேஸ்வரர் ஆலய திருவிழாவின்போது 19 பவுண் தங்க சங்கிலிகள் திருட்டுப் போயிருந்த சம்பவத்தில் 4 பெண்களை பொலிஸார் கைது செய்தனர்.

இதில் தேவாலய திருவிழாவில் கலந்து கொண்ட பெண் ஒருவரின் 2 1/2 பவுண் கொண்ட தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்ததாக சந்தேகிக்கப்படும் கொழும்பு திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த 3 பெண்களை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அதன் பின்னர், அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர் வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி மன்று உத்தரவிட, அவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

அந்த 3 பெண்களையும் பார்ப்பதற்காக சிறைச்சாலைக்கு சென்ற 28 வயதுடைய இரண்டு ஆண்களை கடந்த சனிக்கிழமை சிறைச்சாலைக்கு அருகில் வைத்து சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களை பொலிஸார் விசாரித்தபோது, கைதானவர்கள் வாழைச்சேனை, திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்கள் நாடு முழுவதும் ஆலயங்கள், தேவாலயங்களில் கொள்ளையிடும் கொள்ளை கும்பலை இயக்கி வருபவர்கள் என்கிற விடயமும் தெரியவந்துள்ளது.

மேலும், இவர்கள் நாடு முழுவதும் நிகழும் ஆலய மற்றும் தேவாலய திருவிழாக்கள், உற்சவங்கள் தொடர்பாக முகநூல்களில் வெளிவரும் விளம்பரங்களை தரவிறக்கம் செய்து, அவற்றை நாடெங்கிலும் உள்ள தமது கொள்ளை குழுவைச் சேர்ந்த பெண்களுக்கு வட்ஸ்அப் மூலம் அனுப்பும் செயலை வழக்கமாக செய்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த கொள்ளைக் குழுவின் பிரதான சூத்திரதாரி நீர்கொழும்பைச் சேர்ந்த சுரேஸ் எனவும் அவர் உட்பட இந்த கொள்ளை குழுவைச் சேர்ந்த பலர் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை கைதான இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் பொலிஸார் கூறினர். (அ)

## கப்பலில்...

வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்து மீண்டும் சென்னையை சென்றடைகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வந்திறங்கும் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலைமை காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து, பயணிகளுக்கான அடிப்படை வசதிகள், உள்ளூர் பயணங்களுக்குரிய வாகன ஒழுங்குகள், சுற்றுலா வழிகாட்டும் ஒழுங்குகள் என்பவற்றை செய்வதற்குரிய பொறிமுறைகள் தொடர்பாக ஆளுநர் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினார். (ஐ-03)

## நிதியியல்...

1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்தின் 10(இ) பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளின் பிரகாரம் வகுக்கப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 9 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற அனைத்து நிதியியல் சேவை வழங்குநர்களுக்கும் இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையதாகவிருக்கும் என்பதுடன் இதனூடாக வங்கித்தொழில் சட்டம், நிதித்தொழில் சட்டம் மற்றும் நிதிக்குத்தகைக்கு விடுதல் சட்டம் என்பவற்றின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக்கட்டமைப்புக்கள் மேலும் வலுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஒழுங்குவிதிகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக வகுக்கப்பட்டிருப்பதாகவும், இவை இலங்கை மத்திய வங்கி மூலமான சந்தை நடத்தை மேற்பார்வைக்கு ஏதுவான அடித்தளத்தினை உருவாக்கி, அதனூடாக நாட்டில் நம்பிக்கையானதும் வலுவானதுமான நிதியியல் முறைமையொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் துணைபுரியும் என்றும் எதிர்வுகூறப்படுகின்றது.

ஒழுங்குபடுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் உற்பத்திகள் மற்றும் சேவைகளைக் கையாளும் தனிநபர்களும் வியாபாரங்களும் மேம்படுத்தப்பட்ட வகையில் நியாயமாகவும், வெளிப்படையான விதத்திலும் நடாத்தப்படுவதுடன் அவர்களது நிதிசார் செயற்பாடுகள் தொடர்பில் மீயுயர் நம்பிக்கையுடன் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலச்செய்யக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட கூறுகளை இவ்வொழுங்குவிதிகள் உள்ளடக்கியுள்ளன.

அதுமாத்திரமன்றி டிஜிற்றல் நிதிச் சேவைகள், வாடிக்கையாளர் தரவுப்பாதுகாப்பு மற்றும் விசேட தேவையுடைய வாடிக்கையாளர்களின் நிதியியல் தேவைப்பாடுகள் என்பன தொடர்பான நவீன நடவடிக்கைகளும் இவ்வொழுங்கு விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும் மத்திய வங்கியின் பிணக்குத் தீர்த்தல் பொறிமுறைக்கு மாற்றீடாக, குறைநிரப்புச்செய்யப்பட்ட உள்ளக முறைப்பாட்டுக்கையாள்கை பொறிமுறையையும் இந்த ஒழுங்குவிதிகள் பிரேரிக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இவ்வொழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கடந்த 9 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 12 மாத காலத்துக்குள் நடைமுறைப்படுத் தப்படும் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# 13 நடைமுறையாகும் முன்னரே குருந்தூரில் தமிழர்கள் பொங்கி வழிபாடு; அமுலானால்?

## விமல் வீரவன்ஸவின் சந்தேகம்



கொழும்பு, ஓக. 23

13ஆவது அரசமைப்புத் திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படுவதற்கு முன்னரே தமிழ்க் கட்சிகள் குருந்தூர் மலையில் பொங்கி வழிபாடு நடத்துகிறார்கள் என்றால், 13ஆம் திருத்தம் அமுல்படுத்தப்பட்டால் வடக்கு, கிழக் கில் தொல்பொருள் சின்னங்களுக்கு ஏற்படும் சேதத்தை நினைத்தும் பார்க்க முடியாது - இப்படி தெரிவித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ.

“1987இல் இந்திய-இலங்கை அமைதி ஒப்பந்தம் எனப்படும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றி கூட்டாட்சி அரசை உருவாக்குவோம் என ராஜீவ் காந்தி பிரபாகரனுக்கு வாக்குறுதி அளித்தார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. கூட்டாட்சி அரசின் பிறப்பு என்பது ஈழ அரசின் கருவாகும். அதாவது, ஒரு கூட்டாட்சி மாகாணத்தை உருவாக்குவது ஒரு தனி நாட்டை உருவாக்குவதற்கான முழுமையான நிபந்தனையின் ஒரு பகுதியாகும்.

அதைத் தடுக்க படையினர் தங்கள் உயிரைத் தியாகம் செய்து, தங்கள் கை, கால், கண், சதை, இரத்தத்தை அர்ப்பணித்தனர். படையினர் இறுதியாக பிரிவினைவாதிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்தனர். யுத்தம் மூலம் முடியாததை தட்டில் வைத்து வழங்குவதா? முன்னைய 7 ஜனாதிபதிகள் செய்யாததை தற்போதைய ஜனாதிபதி செய்ய முயல்கிறார் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

30 ஆயிரம் இராணுவத்தினர் எதற்காக உயிர் தியாகம் செய்தார்கள்? மேலும் 29 ஆயிரம் பேர் கை, கால், கண், இரத்தம், சதை எதற்காக கொடுத்தார்கள்? கேள்விகள் கேட்கப்பட வேண்டும். போருக்கு தலைமை தாங்கிய முன்னாள் ஜனாதிபதி இது தொடர்பில் மௌனமாக இருப்பது வேதனையளிக்கிறது. எனவே, இந்த மாபெரும் துரோகத்துக்கு பங்களிக்க வேண்டாம் என அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

குருந்தூர் ஆலயத்தின் கீழ், குளம், அதனைச் சுற்றி விவசாய நிலம் உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கூறியபோது, “குருந்தூர் ஆலயத்துக்கு 300 ஏக்கர் எதற்கு என தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திடம் கேள்வி கேட்டு, இந்த விளை நிலத்தை விவசாயம் செய்பவர்களுக்கு உடனடியாகக் கொடுங்கள்” என்று கூறும் அளவுக்கு ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைபுடன் நெருக்கமாக உள்ளார்.

அத்துடன், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் “குருந்தூர் விகாரையில் இந்து ஆலயம் அமைக்கும் கனவுக்கு” ஜனாதிபதி உயிர் கொடுத்து வருகிறார் - என்றும் கூறினார். (ஐ)

## நித்திரைக்கு...

வயது இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்றும் யாழ். நகரில் வர்த்தகநிலையம் ஒன்றில் பணியாற்றுகிறார் என்றும் தெரிய வருகின்றது.

இவர் ஊசி மூலம் போதைப் பொருளை உள்ளெடுத்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## துப்பாக்கி...

சில துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுக்கு தனிப்பட்ட தகராறுகளும் காரணமாக இருந்தன என்று பொலிஸார் கூறினர்.

உயிரிழப்பு மற்றும் காயமடைதல் சம்பவங்கள் தவிர, ஆறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் எந்தவித உயிரிழப்புகளும் அல்லது காயங்களும் இல்லாமல் பதிவாகியுள்ளன. (ஐ)

## மனிதர்களின்...

கால் இழந்த பறவைகளின் ஒளிப்படங்களுடன் தகவல்களை வெளியிட்டுள்ளார். இதற்கு பலரும் ஆதரவு வெளியிட்டுள்ளதுடன், இது விடயத்தில் மீனவர்கள் - உரிய அதிகாரிகள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

பொதுவாக வலசை வரும் பறவைகளான பூநாரைகள் பெருங்கூட்டமாக வருகின்றன. ஆனையிறவு, சுண்டிக்குளம், மன்னார், யாழ். பண்ணை, வல்லை பகுதிகளில் இந்தப் பறவைகளை காணமுடியும்.

இந்தப் பறவைகள் மீனவர்கள் விரிக்கும் வலைகளில் சிக்குப்பட்டு பல நாள்களாக நின்று காலை இழந்திருக்கலாம் அல்லது வேட்டையாடுபவர்கள் வைத்த கண்ணிகளில் சிக்கி மீளமுயன்று காலை இழந்திருக்கலாம் என்று பறவைகள் - காட்டுயிர்சார் படப்பிடிப்பாளர்கள் தனக்கு தெரிவித்தார் என்றும் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பூநாரைகளை படம்பிடிப்பதற்காகவும் பார்ப்பதற்காகவும் காட்டுயிர் படப்பிடிப்பாளர்கள் வெளிநாடுகளில் இருந்து வருகிறார்கள். இதேபோன்று சுற்றுலா பயணிகளும் வருகின்றார்கள். இது வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்துக்கு வலுச்சேர்க்கும். இந்தப் பறவைகளை நாம் ஏன் அலட்சியப் படுத்துகிறோம் என்றும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தொடர் காய்ச்சல்...

பிறந்த மூன்றாவது நாளே - கடந்த 19ஆம் திகதி குழந்தைக்கு காய்ச்சல் பீடித்துள் ளது. இதையடுத்து பெற்றோர் குழந்தையை நயினாதீவு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அன்றைய தினம் பிற்பகலே குழந்தை யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை குழந்தை உயிரிழந்தது.

மரண விசாரணைகளை திடீர் மரணம் விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

## கிணற்று...

என்று நீர் வழங்கல் சபையின் பிரதி முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு) ஆர். எம். எஸ். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், நிலத்தடி நீரின் சுவை, மணம் அல்லது நிறத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், நீர் மாதிரிகளைப் பரிசோதிக்க வேண்டும். நிலத்தடி நீர் மட்டம் குறைவதால் உப்புத் தன்மையில் மாற்றம் ஏற்படக்கூடும் என்பதால் மக்கள் இது தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்த வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## வானோடு...

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில், மாதனைப் பகுதியில் புத்தர் சிலை ஒன்று அண்மையில் வைக்கப்பட்டதுடன், விகாரை ஒன்றும் அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது. இது தொடர்பாகவும் - அங்கு பண்ணையாளர்களுக்கு நிலவும் பிரச்னைகளுக்கு சுமுக தீர்வு காணவும் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதக் குழு உறுப்பினர்கள், செய்தியாளர்கள் நேற்று முற்பகல் 10 மணியளவில் அங்கு சென்று நிலைமைகளை அவதானித்த பின்னர் அங்கிருந்து திரும்பினர்.

இவர்களின் வாகனம் மாதவனைப் பகுதியிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் பயணிப்பதற்கு உள்ளாகவே அவர்களை பிக்கு தலைமையிலான குழு ஒன்று மதியம் 12 மணியளவில் வழிமறித்தது. இதைத் தொடர்ந்து அங்கிருந்த பெரும்பான்மை இனத்தவர்கள் சுமார் நூறு பேர்வரையில் அங்கு கூடினர். இவர்கள் வாகனத்தில் இருந்த தமிழ்பேசுவோரை அச்சுறுத்தினர். அத்துடன், இது தொடர்பான செய்திகளை வெளியிடக் கூடாது என்றும் அங்கு எடுக்கப்பட்ட காணொலிகள், படங்களை அழிக்குமாறும் செய்தியாளர்களை வற்புறுத்தினர். மேலும், செய்திகளை வெளியிட மாட்டோம் என்று எழுத்தில் தருமாறும் அச்சுறுத்தினர்.

இதன்போது, அங்கிருந்த பிக்கு, “உங்களை வானோடு சேர்த்து கொளுத்தினால்தான் எங்களுக்கு மனநிம்மதியாக இருக்கும்”, என்று கூறி மிரட்டினார் என்று சர்வமத குழு உறுப்பினரான ஆலம் தெரிவித்தார்.

தாங்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டு அச்சுறுத்தப்படுவது தொடர்பாக சர்வமத குழுவினர் உடனடியாக கரடியனாறு பொலிஸாருக்கு தவவல் அளித்தனர். எனினும், சுமார் 3 மணி நேரம் கழித்தே பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றனர்.

பெரும்பான்மையின குழுவுடன் பேச்சு நடத்திய பொலிஸார் நிலைமையை ஓரளவுக்கு சுமுகமாக்கினர். எனினும், அங்கிருந்த பிக்கு, தமிழ் செய்தியாளர்களிடம் இருந்து படங்கள், காணொலிகளை அழிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார். அத்துடன், செய்தியாளர்களின் கமெராக்களை பெற்று சம்பந்தப்பட்ட காட்சிகளை அழித்தனர். அத்துடன், இது தொடர்பான செய்திகளை பிரசுரிக்க மாட்டோம் என்று கடிதம் எழுதுமாறும் நிர்ப்பந்தித்து அதனையும் பெற்றுக் கொண்டார் என்றும் தெரிய வருகின்றது.

இதைத் தொடர்ந்தே - சுமார் 5 மணி நேரம் கழித்து வானில் இருந்த தமிழ் பேசும் சமூகத்தவர்களை பெரும் பான்மையின கும்பல் அங்கிருந்து செல்ல அனுமதித்தது.

**மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்**

இதனிடையே, மாதவனைக்கு சென்று திரும்பியவர்களை வழிமறித்து பெரும்பான்மையினத்தவர்கள் அச்சுறுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய பிக்குவை கைது செய்யுமாறு வலியுறுத்தி நேற்று மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு நகரில் படுகொலையான ஊடகவியலாளர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி அருகே நேற்று மாலை 5.30 மணியளவில் இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# எதிர்க்கட்சிக்கு வாருங்கள்!

## ஜீவனை அழைத்த வேலுகுமார்



கொழும்பு, ஓக. 23

அரசாங்கத்தில் இருந்து எதையும் செய்ய முடியாவிட்டால் எதிர்க்கட்சி வரிசையில் வந்து அமருங்கள் என அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு அழைப்பு விடுத்தார், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாத்தளை, எல்கடுவ சம்பவம் நடந்த இடத்துக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் சென்றிருந்தார். அதை நாங்கள் வரவேற்கிறோம்.

ஆனால், இந்த சம்பவம் தொடர்பாக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீங்கள் அமைச்சராக இருக்கும் இந்த அரசாங்கத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லையென சுயஒப்புதலும் தருகிறீர்கள்.

அப்படி நிலைமையிருக்கும் போது, எங்களையும் அங்கே வந்து இருக்கச் சொல்கிறீர்கள். உங்களால் முடியாதென்றால் இங்கே (எதிர்க்கட்சி வரிசை) வந்து அமருங்கள். வாருங்கள். கூட்டமாக சேர்ந்து நாங்கள் இதற்கு தீர்வு காண்போம்.

முடிந்தால், அந்த உதவி முகாமையாளரை கைது செய்ய இப்பொழுதே நடவடிக்கையெடுங்கள்-என்றார்.

# லைக்கா ஒப்பந்தத்தில் ஊழலா? நிரூபித்தால் பதவி விலகுவேன்!

## அமைச்சர் பந்துல சபையில் அறிவிப்பு



**கொழும்பு, ஓக. 23**

**ஐ அலைவரிசைக்கும், லைக்கா நிறுவனத்துக்குமான ஒளிபரப்பு ஒப்பந்தத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக நிரூபிக்கப்பட்டால் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வேன் என வெகுஜன ஊடக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

நிலையியற் கட்டளைகள் 27 (2) இன் கீழ் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பந்துல குணவர்தன மேலும் தெரிவிக்கையில்-

இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கிய அனுரகுமார திஸாநாயக்கவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த சனல் எந்த நிறுவனத்திற்கும் விற்கப்படவில்லை அல்லது குத்தகைக்கு விடப்படவில்லை. மாதத்திற்கு 150 மில்லியன் வாடகைக்கு விஐஎஸ் பிராட்காஸ்டிங் நிறுவனத்திற்கு ஒளிபரப்பு நேரம் ஆறு மாதங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. நான் எந்த சட்டவிரோத இடமாற்றத்தையும் அறிவுறுத்தவில்லை. எனக்கு சட்டபூர்வ அதிகாரம் இருப்பதால் இது அங்கீகரிக்கப்பட்டது. கையெழுத்திட்ட ஒப்பந்தம் தாக்கல் செய்யப்படுகிறது. நீங்கள் இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சரிபார்க்கலாம். இதனை நாம் அமைச்சரவையில் முன்வைத்தபோது இதனை அமைச்சரவைக்கு கொண்டு வரக்கூடாது என ஜனாதிபதி தெரிவித்தார். வணிகம் செய்ய இயக்குநர் குழுவுக்கு உரிமை உண்டு என்றார்.

தொலைக்காட்சி நிறுவனம் 2018 முதல் திவாலாகி விட்டது. இந்த காலகட்டத்திற்கு 166 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தால் கடைசியில் மின் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை. தேசிய தொலைக்காட்சிக்குகூட மின்வெட்டை நிறுத்த வழியில்லை. இந்தத் தொகையைப் பெற்றவுடன் நான் முதலில் செய்த வேலை மின்கட்டணத்தைச் செலுத்தியது தான். இல்லை என்றால் இது நின்றுவிடும். மோசடி, ஊழல் நடந்தால் நீதிமன்றம் செல்லலாம்.அப்படி நடந்தது நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவேன்-என்றார்.

(அ)

# மாத்தளை சம்பவம் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு!



கொழும்பு, ஓக. 23

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று பாராளுமன்றில் எதிர்ப்பில் ஈடுபட்டது.

மாத்தளை, எல்கடுவ பிரதேசத்தில் இருந்து மூன்று தோட்ட குடும்பங்கள் வெளியேற்றப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பதாதைகளை ஏந்தியவாறு அந்தக் குழு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

மாத்தளை-எல்கடுவ ரத்வத்தை உள்ள அரச தோட்டமொன்றைச் சேர்ந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரை தோட்ட பிரதி முகாமையாளர் விரட்டி விரட்டி பீதியை கிளப்பி அவர்களின் வீடுகளை இடித்த சம்பவம் காரணமாக பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கடும் அமளி ஏற்பட்டது.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் நடைபெற்றதால், சபையின் அலுவல்களைக் கட்டுப்படுத்த சபாநாயகர் கடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரோகினி குமாரி விஜேரத்ன, வடிவேல் சுரேஸ், எஸ்.ராதாகிருஷ்ணன், மனோ கணேசன், எஸ்.வேலுகுமார், கோவிந்தன் கருணாகரம், சி.சிறிதரன், கின்ஸ் நெல்சன், சமிந்த விஜேசிறி, காவிந்த ஜயவர்தன உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரான வடிவேல் சுரேஷ் கறுப்பு உடை அணிந்து பாராளுமன்றத்தில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மேலும் தோட்ட அதிகாரியின் அடாவடித்தனத்தை வெளிக்காட்டும் காணொளி ஆதாரத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

(அ)

# நாமல் ராஜபக்ஷவே சிறந்த இளம்தலைவர்

## கூறுகிறார் சாகர காரியவசம்



கொழும்பு, ஓக. 23

”நாமல் ராஜபக்ஷ சிறந்த இளம் தலைவர். இதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. ஆனால் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை.” - என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மொட்டு கட்சியின் கூட்டமொன்று கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய மொட்டு கட்சி எம்.பிக்கள் சிலர், நாமல் ராஜபக்ஷ ஒரு இளம் சிங்கம் எனவும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு தகுதியானவர் எனவும் கருத்து வெளியிட்டனர்.

இந்நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இளம் சிங்கத்தை களமிறக்குவதற்கு தீர்மானித்துவிட்டீர்களா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த சாகர காரியவசம்,

“அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதத்துக்கு பிறகே ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். குறித்த தேர்தலுக்கு இன்னும் நாள் இருக்கும் நிலையில் முன்கூட்டியே எமது கட்சி பதற்றம் அடையாது. நாட்டின் அப்போதைய நிலைமை, மக்களின் நிலைப்பாடு, அரசியல் நிலைவரம் ஆகியவற்றைக்கருத்திற்கொண்டு வெற்றி வேட்பாளர் ஒருவரை நிறுத்துவோம். இதை மட்டுமே தற்போது அறிவிக்க முடியும்.

இந்நாட்டில் உள்ள திறமையான இளம் தலைவர்தான் நாமல். இதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் பற்றி கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை.”-என்றார். (அ)

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்துப் பிரிவு குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என இரத்த வங்கி அறிவித்துள்ளது.

தற்போது நாளுக்கு நாள் குருதிக்கான தேவை அதிகரித்துச் செல்வதினால் இதனால் நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியாதுள்ளது.

ஆகவே 18 - 55 வயதிற்கு இடைப்பட்ட, 50 கிலோகிராம் மற்றும் அதற்கு மேற்பட்ட நிறையும் கொண்ட ஆண், பெண் இரு பாலாரும் எவ்வித பிரச்னையுமின்றி இரத்த தானம் செய்யலாம் என வைத்தியசாவை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் ஏற்கனவே இரத்த தானம் செய்தவர்கள் எவ்வித நோய்களுமின்றி இருந்தால் 60 வயது வரை இரத்த தானம் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலவும் குருதித் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் நிறைவடைந்தவர்களும் புதிதாக இரத்ததானம் செய்ய விரும்புவர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், தங்கள் ஊர்களிலும் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அறிவித்தால் தாம் வருகை தந்து குருதியை சேகரிக்கும் பணிகளை முன்னெடுப்போம் என வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

அத்துடன், 0772105375 அல்லது 0212223063 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உலகக்கிண்ண சதுரங்கம் பிரக்ஞானந்தா இறுதி சுற்றில்!



பாகு, ஓக. 23

அஸர்பைஜானில் நடைபெறும் உலகக்கிண்ண சதுரங்க போட்டியில் இந்தியாவின் ஆர். பிரக்ஞானந்தா (வயது 18) இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார். இந்தப் போட்டியின் வரலாற்றில் இறுதிச் சுற்றுக்கு வந்த இளம் வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

முன்னதாக, அரையிறுதி சுற்றில் அமெரிக்க கிராண்ட் மாஸ்டரான பாபியனோ கருணாவை எதிர்கொண்ட அவர், 2 போட்டிகளையும் சமன் செய்தார். இருவருமே ஞாயிற்றுக்கிழமை முடிவில் 1-1 என சமநிலையில் இருந்தனர்.

வெற்றியாளரை தீர்மானிக்க நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்த சமநிலை தவிர்ப்பு வாய்ப்பில் 3.5 - 2.5 என்ற கணக்கில் பிரக்ஞானந்தா வெற்றி பெற்றார்.

இதையடுத்து இறுதிச் சுற்றில், உலகின் முதல்நிலை வீரரான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்செனுடன் மோதுகிறார் பிரக்ஞானந்தா.

முன்னதாக கார்ல்சென் தனது அரையிறுதியில் அஸர்பைஜானின் நிஜத் அபாசோவுக்கு எதிராக முதல் போட்டியில் வென்றார். 2ஆவது போட்டியை சமன் செய்து இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

அவர் உலகக் கிண்ண இறுதிச்சுற்றுக்கு வந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்தப் போட்டியில், விஸ்வநாதன் ஆனந்துக்கு பிறகு அரையிறுதிக்கு முன்னேறிய 2ஆவது இந்தியர் என்ற பெருமையுடன் பிரக்ஞானந்தா உள்ளது குறிப்பிடத்தக்கது. முந்தைய போட்டிகளில் பிரக்ஞானந்தா 3 முறை கால்செனை வீழ்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.



## ஆசிய கிண்ணத் தொடர்
## பங்களாதேஷ் அணியிலிருந்து எபொட் ஹுசைன் விலகல்!

டாக்கா, ஓக. 23

ஆசிய கிண்ண தொடருக்கான பங்களாதேஷ் அணியிலிருந்து காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் எபொட் ஹூசைன் விலகியுள்ளார்.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை, பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்பதற்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், அணியிலிருந்து எபொட் ஹூசைன் காயம் காரணமாக விலகியுள்ளார்.

எபொட்டுக்கு மாற்று வீரராக 20 வயது நிரம்பிய வேகப் பந்து வீச்சாளர் தன்சிம் ஹசன் சகீப் அறிமுக வீரராக அணியில் இடம்பிடித்துள்ளார். இவர் 2020ஆம் ஆண்டு நடந்த 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணத்தை பங்களாதேஷ் வெல்ல உதவியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# லீக் கிண்ணத்தை வென்றது; மெஸ்ஸியின் இன்ரர் மியாமி



நேஷ்வில்லே, ஓக. 23

லீக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் மெஸ்ஸியின் அபார ஆட்டத்தால் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது இன்ரர் மியாமி அணி.

நேஷ்வில்லேயில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இன்ரர் மியாமி அணியும்-நேஷ்வில்லே அணியும் மோதின.

ஆட்டம் தொடங்கிய 23ஆவது நிமிடத்தில் ரொபேட் ரெய்லர் தட்டிக்கொடுத்த பந்தை கோலாகக் கினார் மெஸ்ஸி. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் 1-1 என சமநிலையில் இருந்தன.

இதையடுத்து சமநிலை தவிர்ப்பு உதை கடைபிடிக்கப்பட்டது. இதில் மெஸ்ஸி முதல் கோலடித்தார். இறுதியில் 10-9 என்ற கோல் கணக்கில் வென்று லீக் கிண்ணத்தை கைப்பற்றியது இன்ரர் மியாமி.



# சின்சினாட்டி ஓப்பன் கோகோ சம்பியன்!

கொழும்பு, ஓக. 23

சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் கோகோ காப் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் கோகோ காப் 6-3, 6-4 என்ற நேர் செற்றில் கரோலினா முச்சோவாவை (செக் குடியரசு) சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

ஆயிரம் தரவரிசை புள்ளிகளை வழங்கும் இத்தகைய பட்டத்தை 19 வயதான கோகோ காப் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

இந்த வெற்றியின் மூலம் புதிய தரவரிசை பட்டியலில் கோகோ காப் 6ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். (ஐ)

# தந்தை இறந்தது தெரியாமல் போட்டியில் ஆடிய வீராங்கனை



சிட்னி, ஓக. 23

சிட்னியில் நடந்த பெண்கள் உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி இங்கிலாந்தைத் தோற்கடித்து உலகக் கிண்ணத்தை வென்றது.

விறுவிறுப்பான இறுதி மோதலில் ஸ்பெயின் அணியின் தலைவி ஒல்கா கார்மோனா அடித்த ஒரேயொரு கோலே ஆட்டத்தின் முடிவை மாற்றி அவரின் அணியை உலகச் சம்பியன் ஆக்கியது.

23 வயதான கார்மோனாவின் தந்தையார் நோய் வாய்ப்பட்டிருந்தார். சிட்னியில் இறுதி ஆட்டம் ஆரம்பமாவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பாக அவர் உயிரிழந்தார். இறுதி ஆட்டம் முடிவடையும் வரை அந்தச் செய்தி கார்மோனாவுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்ற தகவல் இப்போது வெளியாகியிருக்கிறது.

ஆட்டம் முடிவடைந்து - வெற்றிக் களியாட்டங்களுக்கு மத்தியில் - உலகக் கிண்ணம் அவரின் கையில் வழங்கப்பட்ட பிறகே தந்தையார் இறந்த துயரச் செய்தியை உறவினர்கள் அவருக்குத் தெரியப்படுத்தினர். அந்தச் செய்தி ஸ்பெயின் அணியினரையும் ரசிகர்களையும் மகிழ்ச்சியும் துயரமும் கலந்த மனநிலையுடன் வெற்றியைக் கொண்டாட வைத்தது.

”இன்றிரவு நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதும், நீங்கள் என்னைப் பற்றி பெருமைப்படுகிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும் அப்பா. அமைதியில் இளைப்பாறுங்கள்.” - இவ்வாறு கார்மோனா தனது சமூகவலைத் தளப் பதிவு ஒன்றில் எழுதியிருக்கிறார்.

கார்மோனா ஆட்டத்தில் முழுக் கவனம் செலுத்துவதை உறுதிப்படுத்தும் விருப்பத்துடனேயே மரண செய்தியை உடனடியாகத் தெரியப்படுத்துவதைத் தவிர்த்தோம் - என்று குடும்பத்தினர் கூறியுள்ளனர். (ஐ)

ஈழநாடு



ச.கோபாலகிருஷ்ணன்

# திரை வன்முறை தீவிரமடையும் பேராபத்து

ஆகஸ்ட் 10 அன்று வெளியான ‘ஜெயிலர்’ திரைப்படம் வணிகரீதியாக மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. நெல்சன் இயக்கியிருக்கும் இந்தப் படத்தில் வன்முறை அளவுகடந்ததாகவும் அப்பட்டமாகத் திரையில் காண்பிக்கப்படுவதாகவும் இருப்பது இந்தப் படத்தையும் இதற்குக் கிடைத்துவரும் வரவேற்பையும் மிகுந்த பிரச்னைக்குரியதாக மாற்றுகிறது.

**ரத்தம் தெறிக்கும் காட்சிகள்:**

படத்தில் ஓய்வுபெற்ற ஜெயிலரான முத்துவேல் பாண்டியன் (ரஜினி), வில்லனின் அடியாள்களில் ஒருவரின் தலையைத் துண்டிக்கிறார். தலை துண்டிக்கப்படுவதும் துண்டிக்கப்பட்ட தலை கீழே விழுவதும் திரையில் காட்டப்படுகின்றன.

இன்னொரு காட்சியில் ஜெயிலராக வரும் முத்துவேல் பாண்டியன், தன்னை எதிர்த்துக் கேள்வி எழுப்பிய ஒரு கைதியின் காதை அறுக்கிறார். அறுபட்ட காது கீழே விழுவதும் காண்பிக்கப்படுகிறது. படத்தில் உள்ள எண்ணற்ற வன்முறைக் காட்சிகளில் உச்சக்கட்ட உதாரணங்கள் மட்டுமே இங்கே கூறப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ் சினிமாவில், குறிப்பாக முன்னணி நட்சத்திரக் கதாநாயகர்களின் திரைப்படங்களில் வன்முறைக் காட்சிகளும் பல வடிவங்களில் வன்முறையை அப்பட்டமாகச் சித்தரிப்பதும் அதிகரித்துவருகிறது. கடந்த ஆண்டு கமல்ஹாசன் தயாரித்து நடித்திருந்த ‘விக்ரம்’, விஜய் நடித்திருந்த ‘பீஸ்ட்’, இந்த ஆண்டு தொடக்கத்தில் அஜித் நடிப்பில் வெளியான ‘துணிவு’ ஆகிய திரைப்படங்களில் அதீத வன்முறைக் காட்சிகள் இடம்பெற்றிருந்தன. இந்தப் போக்கில் புதிய உச்சத்தைத் தொட்டிருக்கிறது ‘ஜெயிலர்’.

**குழந்தைகளும் வன்முறையும்:**

பொதுவாகக் குழந்தைகளைக் கவரும் நடிகர்களே உச்ச நட்சத்திர அந்தஸ்தைப் பிடிப்பார்கள். இதற்கு ரஜினியைவிட மிகச் சிறந்த உதாரணம் இருக்க முடியாது. 1980களில் ‘அன்புள்ள ரஜினிகாந்த்’, ‘ராஜா சின்ன ரோஜா’ எனக் குழந்தைகளை மையப்படுத்திய திரைப்படங்களிலும் அவர் நடித்திருக்கிறார். தலைமுறைகள் தாண்டி இன்றுவரை குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த நடிகராகத் திகழ்ந்துவருகிறார்.

‘ஜெயிலர்’ படத்துக்குப் பலர் கைக்குழந்தைகளையும் பத்து வயதுக்கு உள்பட்ட குழந்தைகளையும் அழைத்து வருகிறார்கள். அதேபோல, குழந்தைகளைக் கவர்ந்த நடிகர்களில் ரஜினிக்கு அடுத்த இடத்தில் விஜய் இருக்கிறார். ‘பீஸ்ட்’ படத்தையும் பலர் குழந்தைகளுடன் சென்று பார்த்தனர்.

கமல், அஜித் என முன்னணி நடிகர்கள் படங்கள் அனைத்தையும் குழந்தைகள் உள்பட அனைத்து வயதினரும் திரையரங்குக்குச் சென்று பார்க்கின்றனர். இந்நிலையில், குழந்தைகளும் பார்க்கத் தகுந்தவையாக விளம்பரப்படுத்தப்படும் திரைப்படங்களில் இவ்வளவு வன்முறை இருப்பதும் இவ்வளவு வன்முறை இருக்கும் திரைப்படங்களுக்கு அது குறித்த எந்தக் கவலையும் இல்லாமல் குழந்தைகள் அழைத்துச் செல்லப்படுவதும் மிகத் தீவிரமான சமூக அவலம்.

**நட்சத்திரங்களின் பொறுப்பு:**

இன்றைய சூழலில், அனைத்து முன்னணி நடிகர்களுமே தங்களது வெற்றியை உறுதிசெய்ய வன்முறையை நாடத் தொடங்கிவிட்டனர். அதுவும் 70 வயதைக் கடந்துவிட்ட ரஜினியும் 70ஐ நெருங்கிக் கொண்டிருக்கும் கமலும் சரிவிலிருந்து மீண்டு அவர்களின் நட்சத்திர அந்தஸ்தை உறுதிசெய்துகொள்ள உதவிய ‘ஜெயிலர்’, ‘விக்ரம்’ திரைப்படங்கள் வன்முறை நிறைந்தவையாக இருப்பது சாதாரணமாகக் கடந்துவிடக்கூடிய விஷயம் அல்ல.

சமூகப் பொறுப்புமிக்க கலைஞராக அறியப்படும் கமலும் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த நடிகராக அறியப்படும் ரஜினியும் தங்கள் திரைப்படங்களில் இவ்வளவு அப்பட்டமான வன்முறைக் காட்சிகளுக்கு இடமளிப்பது அவர்களின் வயதுக்கும் அனுபவத்துக்கும் மக்களிடையே அவர்கள் பெற்றிருக்கும் நன்மதிப்புக்கும் அழகு சேர்க்கிறதா என்பது குறித்து அவர்கள் யோசிக்க வேண்டும். பெரும் ரசிகர் படையைப் பெற்றிருக்கும் விஜய், அஜித், சூர்யா ஆகியோருக்கும் இது பொருந்தும்.

**கடந்த ஆண்டு கமல்ஹாசன் தயாரித்து நடித்திருந்த ‘விக்ரம்’, விஜய் நடித்திருந்த ‘பீஸ்ட்’, இந்த ஆண்டு தொடக்கத்தில் அஜித் நடிப்பில் வெளியான ‘துணிவு’ ஆகிய திரைப்படங்களில் அதீத வன்முறைக் காட்சிகள் இடம்பெற்றிருந்தன. இந்தப் போக்கில் புதிய உச்சத்தைத் தொட்டிருக்கிறது ‘ஜெயிலர்’.**

**இயக்குநர்களின் தாக்கம்:**

நெல்சன், லோகேஷ் கனகராஜ் உள்ளிட்ட இயக்குநர்களே முதல்நிலை நட்சத்திரங்களுடன் பணியாற்றுவதற்கான வாய்ப்பை அதிகமாகப் பெறுகிறார்கள். இவர்கள் வன்முறையை அப்பட்டமாகக் காட்சிப்படுத்துவதால் சமூகத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் குறித்த எந்தக் கவலையும் அற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் வெற்றியைப் பார்த்து பிற இயக்குநர்களும் இவர்களின் பாதையில் பயணித்து தமது திரைப்படங்களில் வன்முறை உள்ளடக்கத்தை அதிகரிக்கிறார்கள்.

‘சுப்ரமணியபுரம்’ திரைப்படத்தின் வெற்றி, மதுரை வட்டாரத்தை ரத்தவெறி பிடித்த பூமியாகக் காட்டும் பல வன்முறைத் திரைப்படங்களுக்கு வித்திட்டது போல் இப்போது இவர்கள் இருவரின் படங்கள் தாதாக்கள், ரவுடிகள் தொடர்பான வன்முறையை மையப்படுத்திய திரைப்படங்களுக்கு வித்திட்டிருக்கின்றன.

**தவறும் தணிக்கை வாரியம்:**

முதல் நிலை நட்சத்திரங்கள் நடிக்கும் திரைப்படங்கள் மிகப் பெரிய பொருள் செலவில் தயாரிக்கப்படுகின்றன. படத்துக்கான செலவின் பெரும்பகுதி இந்த நடிகர்களின் சம்பளத்துக்கே சென்றுவிடுகிறது. பெரிய முதலீட்டைத் திரும்பப் பெற அனைத்து வயதினரையும் திரையரங்குக்கு வரவழைப்பது கட்டாயமாகிவிடுகிறது. எனவே, இந்தப் படங்களுக்கு அனைத்து வயதினருக்கும் பார்க்கத் தகுந்தவை என்பதற்கான தணிக்கைச் சான்றிதழைச் சம்பந்தப்பட்ட திரைப்படக் குழுவினர் எப்படியாவது பெற்றுவிடுகிறார்கள்.

கெட்ட வார்த்தைகள், அரசியல்ரீதியான சர்ச்சைக்குரிய வசனங்கள் ஆகியவற்றை நீக்குவதில் கறாராகச் செயல்படும் தணிக்கை வாரியம், வன்முறைக் காட்சிகளுக்கு அத்தகைய கறார்த்தன்மையைக் கடைப்பிடிப்பதில்லை. பெரியவர்களின் துணையுடன் குழந்தைகள் பார்க்கலாம் என்பதற்கான ‘யுஏ” சான்றிதழைப் பெற்ற ‘விக்ரம்’, ‘ஜெயிலர்’ திரைப்படங்களில் இடம்பெற்றுள்ள வன்முறைக் காட்சிகளைப் பார்க்கும்போது, வன்முறைக் காட்சிகளைத் தடுப்பதில் தணிக்கைத் துறைக்கு முன்பு இருந்த குறைந்தபட்ச அக்கறை கூட இப்போது இல்லை என்று தோன்றுகிறது.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் பார்க்கத் தகுந்தவை என்பதற்கான ‘யு’ சான்றிதழ் கொடுக்கப்பட்ட திரைப்படங்களில்கூட இவ்வளவு அப்பட்டமான வன்முறை இருந்ததில்லை. விளிம்புநிலையைச் சேர்ந்த ஓர் இளைஞன் அரசியல் கட்சி ஒன்றில் செல்வாக்குமிக்க தாதாவாக உயரும் கதைக்களத்தைக் கொண்ட ‘புதுப்பேட்டை’ (2006) திரைப்படத்தில்கூட இவ்வளவு அப்பட்டமான வன்முறை இல்லை.

**வன்முறையின் இயல்பாக்கம்:**

அளவு கடந்த வன்முறைக் காட்சிகளைப் பார்த்துப் பழகுவது, குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களுக்குள்ளும் வன்முறை எதிர்ப்பு மனநிலையை நீர்த்துப்போக வைக்கிறது. அதுவும் நல்லவர்களாகச் சித்தரிக்கப்படும் நாயகர்கள் சர்வசாதாரணமாக மனிதர்களைக் கொல்வது வன்முறையை இயல்பாக்குகிறது; ஒரு மனிதர் உயிரிழப்பதால் ஏற்படக்கூடிய பதற்றத்தையும் பரிவையும் நீர்த்துப்போக வைக்கிறது.

முன்பெல்லாம் ரத்தம் தெறிக்கும் காட்சிகளுக்குக் கண்களை மூடிக்கொண்ட ரசிகர்கள் இப்போது தலை வெட்டப்பட்டு கீழே விழும் காட்சிக்குக் கைதட்டிச் சிரிக்கிறார்கள். பெரும்பாலான திரைப்பட விமர்சகர்களும் ‘ஜெயிலர்’ படத்தில் தலை துண்டிக்கப்படும் காட்சியையோ ‘விக்ரம்’ படத்தில் தலையற்ற உடல் காட்டப்பட்டதையோ பிரச்னைக்குரியதாக அடையாளப்படுத்தவில்லை. வன்முறையை நாம் எவ்வளவு சாதாரணமாகக் கருதத் தொடங்கிவிட்டோம் என்பதற்கான சான்றுகள் இவை.

வன்முறை சார்ந்த கதைகளை முற்றிலும் தவிர்க்க முடியாதுதான். ஆனால், வன்முறையைப் பூடகமாகவும் வரம்புமீறாமலும் வெளிப்படுத்த பல வழிகள் இருக்கின்றன. அவற்றைப் படைப்பாளிகள் கற்றுக்கொள்ள வேண்டும். தணிக்கைத் துறையும் விமர்சகர்களும் வன்முறையைத் தடுப்பதிலும் கண்டிப்பதிலும் கூடுதல் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். கதைக்குப் பொருத்தமில்லாமலும் அதிர்ச்சி மதிப்பைக் கூட்டுவதற்காகவும் திரைப்படங்களில் திணிக்கப்படும் வன்முறையை வயதுவந்த பார்வையாளர்களும் எதிர்க்க வேண்டும்.

அத்தகைய படங்களுக்கு குழந்தைகளை எந்தக் காரணத்துக்காகவும் அழைத்துச் செல்லக் கூடாது. குழந்தைகள் ஆபாசக் காட்சிகளைப் பார்த்துவிடக் கூடாது என்பதில் செலுத்தப்படும் அக்கறை, வன்முறைக் காட்சிகள் அவர்களின் பார்வைக்குச் செல்வதிலிருந்து தடுப்பதிலும் வெளிப்பட வேண்டும். அனைத்துத் தரப்பினரும் தம் சமூகப் பொறுப்பை உணர்ந்து செயல்படுவது மட்டுமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெறுவதற்கான தொடக்கமாக அமையும். ●

# எதிர்காலத்துக்கான வாக்குறுதிகளை விடவும் தற்போது அரசாங்கத்தின் செயற்பாடுகளே முக்கியம்



கலாநிதி ஜெகான் பெரேரா

நாட்டின் நிலைவரத்தை குறிப்பாக பொருளாதார மற்றும் அரசியல் நிலைவரத்தை உறுதியானது அதேவேளை மந்தநிலையில் உள்ளது என்று வர்ணிக்கமுடியும். பொருளாதாரம் உறுதியானதாக இருக்கிறது என்று இங்கு கூறப்படுவதன் அர்த்தம் சர்வதேச வங்குரோத்து நிலை பிரகடனப்படுத்தப்பட்ட கடந்த வருட நிலைவரத்துடன் ஒப்பிடும்போது மேலும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படவில்லை என்பதேயாகும்.

ஆனால், பொருளாதாரம் தொடர்ந்து சுருக்கமடைந்து வருகிறது. இந்த வருடத்தின் தொடக்கத்தில் பொருளாதாரம் பதினொன்றுக்கும் அதிகமான சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. கடந்த வருடம் மக்களை ஆத்திரமடையவைத்து வீதிகளில் இறக்கிய பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் தட்டுப்பாடு மீண்டும் ஏற்படவில்லை. இது ஒரு நிவாரணமாக அமைந்திருக்கிறது. சர்வதேச வங்குரோத்து நிலை ஏற்பட்ட உலகின் வேறு பல நாடுகளில் அடுத்தடுத்து பல சுற்றுக்கள் பொருளாதார வீழ்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது.

விலை அதிகரிப்புகளின் விளைவாக பொருட்களின் கிராக்கி குறைவடைவதால் வாழ்க்கைத்தரம் தொடர்ந்தும் பலவீனப்பட்டுக்கொண்டுபோகின்ற போதிலும், பணவீக்கவீதத்தை குறைப்பதிலும் பொருட்கள் தட்டுப்பாட்டை இல்லாமல் செய்வதிலும் அரசாங்கத்திற்கு இருக்கும் ஆற்றல் பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பொருளாதார உறுதிப்பாட்டுடன் இணைந்ததாக மந்தநிலையும் இருந்துவருகிறது. வாழ்க்கைத்தரம் பெருமளவுக்கு குறைக்கப்பட்ட நிலையிலேயே பெரிதாக மெச்சப்படும் பொருளாதார உறுதிப்பாடு ஏற்பட்டிருக்கிறது. படுமோசமான நெருக்கடிக்கு பிறகு ஒரு வருடம் கடந்த நிலையில் சனத்தொகையில் பெரும்பாலான பிரிவினரின் சம்பளங்கள் பொருளாதாரத்தில் பணவீக்கத்தின் தாக்கத்துக்கு ஓரளவுக்கேனும் ஈடுகொடுக்கக்கூடிய முறையில் அதிகரிக்கப்படவில்லை.

பணவீக்க வீதம் வீழ்ச்சியடைந்திருக்கின்ற போதிலும் கூட சம்பளங்கள் அதிகரிக்கப்படாத நிலையில் பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்தவண்ணமே இருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் மக்களில் அதிகப்பெரும்பாலானவர்களின் வாழ்க்கைத்தரம் தொடர்ந்து வீழ்ச்சிகண்டுகொண்டேபோகிறது.

இலங்கையில் மூன்றாம் வகுப்பு மாணவர்களில் 85 சதவீதமானோர் எழுத்தறிவிலும் கணக்கு அறிவிலும் குறைந்தபட்ச

தேர்ச்சியை அடையவில்லை என்று யூனிசெவ் அமைப்பின் அண்மைய ஆய்வொன்றின் மூலம் அறியக்கடியதாக இருக்கிறது. கல்விக்கான செலவினம் தொடர்பிலான சர்வதேச அளவுகோல் நிகர உள்நாட்டு உற்பத்தியில் 4 - 6 சதவீதமாக இருக்கும் நிலையில் அதற்கும் மிகவும் குறைவாக வெறுமனே 2 சதவீதத்தில் இருக்கிறது இலங்கையின் கல்விக்கான செலவினம். தெற்காசியாவில் கல்விக்கு மிகவும் குறைவாக செலவிடும் நாடாக இலங்கை விளங்குகிறது என்றும் யூனிசெவ் கூறியிருக்கிறது.

கடந்த வருடம் இலங்கை வங்குரோத்து நிலையை அடைவதற்கு முன்னதாக அது நடுத்தர வருமானமுடைய நாடு என்ற அந்தஸ்தை அடைந்திருந்தது. பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து வந்த வங்குரோத்து நிலை பொருட்களின் விலைகளை இரண்டு, மூன்று மடங்காக அதிகரித்தது. பணவீக்கம் 70 சதவீதத்துக்கும் அதிகமானதாக இருந்ததாக அரசாங்கம் மதிப்பிட்டது.

ஆனால், அடிப்படை உணவுப் பொருட்களினதும் எரிபொருட்களினதும் விலைகள் இரண்டு, மூன்று மடங்காக அதிகரித்தது. நிதித்துறை மற்றும் வங்கித்துறை போன்ற குறிப்பிடத்தக்க சில துறைகளைத் தவிர ஏனைய துறைகளில் சம்பளங்கள் பெரும்பாலும் மந்தநிலையிலேயே இருக்கிறது. சில துறைகளில் சம்பளங்கள் வீழ்ச்சிகண்டிருக்கின்றன என்றும் கூறலாம்.

பொருளாதார மீட்சிக்காக அரசியல்வாதிகள் மெகா திட்டங்களை தீட்டுகின்ற அதேவேளை அடிப்படை விவசாயத்துறை, மீன்பிடித்துறை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகள் மீட்சிபெறுவதற்கு நீண்டதூரம் செல்லவேண்டியிருக்கிறது. இத்தகைய இடர்மிகு சூழ்நிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வோரின் எண்ணிக்கையின் அதிகரிப்பு அதிர்ச்சி தருவதாக இருக்கிறது. இலங்கை மத்திய வங்கியின் 2022 வருடாந்த அறிக்கையின் பிரகாரம் கடந்த வருடம் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புத் தேடி சென்றவர்களின் தொகை 154 சதவீதமாக அதிகரித்திருந்தது.

### இருள்மிகு நிலைவரம்

நிலைவரத்தில் மாற்றம் ஏற்படும் என்பதற்கான நம்பிக்கை ஆற்றலும் தேச்சியும் கொண்ட ஊழியர்களும் துறைசார் நிபுணத்துவமுடையவர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுப்பதற்கு போதுமானதாக இல்லை. இந்த நிலைவரம் தணிவதற்கான எந்த அறிகுறியும் இல்லாமல் தொடருகிறது. தேர்ச்சிபெற்ற ஆளணி இல்லாதமை நாட்டின் முன்னோக்கிய நகர்வை பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னர் இருந்த நிலைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை பெருமளவுக்கு கஷ்டமானதாக்கும்.

மருத்துவ ஆளணியின் குறிப்பாக விசேட மருத்துவ நிபுணர்களின் இழப்பின் விளைவாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கு ஊடகங்கள் பெருமளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றன. பல விசேட மருத்துவ நிபுணர்கள் வெளியேறியதையடுத்து மக்கள் சில மருத்துவ சேவைகளைப் பெறுவது கஷ்டமாக இருக்கிறது. தகவல் தொழில்நுட்ப நிபுணர்களின் இழப்பு உயர்ந்த வருமானத்தை தரும் இந்த துறையின் விரிவாக்கத்தை கட்டுப்படுத்துகிறது. ஏனென்றால் இந்த துறையில் உள்ள கம்பனிகளினால் சர்வதேச சந்தையில் இருந்து

**தொழில்களைப் பெறமுடியாமல் இருக்கிறது.**

பெருமளவில் வெளிநாடுகளுக்கு செல்வோரில் கணிசமான எண்ணிக்கையில் ஆங்கிலம், கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசிரியர்கள் அடங்குகிறார்கள். கடந்த ஒன்பது மாதங்களில் மாத்திரம் சுமார் 5000 ஆயிரம் ஆசிரியர்கள் நாட்டைவிட்டு சென்றிருக்கிறார்கள்.

இதே போன்றே அரசியல் அரங்கிலும் நிலைவரம் இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. உறுதியான தோற்றப்பாடு இருக்கின்ற போதிலும், மந்தநிலையும் காணப்படுகிறது. ஒரு வருடத்துக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது வீதிப் போராட்டங்கள் காரணமாக குழப்பநிலையும் பொருளாதார இடர்பாடுகள் மற்றும் ஆட்சி மாற்றத்துக்கான வேட்கையின் விளைவாக தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தங்களுக்கான சாத்தியமும் காணப்பட்டது.

அரசாங்கம் கடடுப்பாட்டை இழந்து எதிர்காலம் குறித்து ஒரு நிச்சயமற்றதன்மை நிலவியது. ஆனால், ஜனாதிபதி விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்ததையடுத்து அரசாங்க கட்டுப்பாடு விரைவாகவே மீளநிலைநிறுத்தப்பட்டு அராஜக நிலையை நோக்கிய போக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. மக்களின் விரக்தி பீறிடுவதைக் கட்டுப்படுத்த பாதுகாப்பு படைகளை பயன்படுத்துவது நீண்டகால நோக்கில் செய்யத்தக்க காரியமாக இருக்கப்போவதில்லை என்பதே பிரச்சினையாகும்.

போராட்ட இயக்கத் தலைவர்களில் பெரும் எண்ணிக்கையானோரைக் கைதுசெய்வதற்கு தேசிய பாதுகாப்பு சட்டங்களை பயன்படுத்தியதன் மூலமாகவும் மக்கள் போராட்டங்களை கலைக்க பொலிசார் தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மற்றும் தண்ணீர்ப்பீரங்கி தாக்குதல்களை நடத்தியதன் மூலமாகவுமே அரசியல் உறுதிப்பாடு மீளநிலைநிறுத்தப்பட்டது. போராட்டங்கள் ஒரு அராஜக நிலைக்கு தீவிரமடைந்து பாராளுமன்றம் உட்பட பிரதான அரச கட்டிடங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் சாத்தியம் இருந்ததால் இவ்வாறு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று நியாயம் கற்பிக்கப்பட்டது.

ஆனால் இத்தகைய கடுமையான நடவடிக்கைகள் எந்தவொரு மக்கள் ஆர்ப்பாட்டத்தையும் ஒடுக்குவதற்கு தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட 1983 கறுப்பு ஜூலை இனவன்செயல்களின் 40 வது வருட நினைவை முன்னிட்டு கொழும்பு கனத்தை மயானத்துக்கு முன்பாக நிகழ்வொன்றை ஏற்பாடு செய்த நடுத்தர வயது சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிராகவும் கூட கலகம் அடக்கும் பொலிசார் ஏவிவிடப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

சிறிய போராட்டங்களை அனுமதித்தால் அது கடந்த வருடம் இடம்பெற்றதைப் போன்று இரண்டாவது சுற்று மக்கள் கிளர்ச்சிக்கு வழிவகுத்துவிடும் என்று அரசாங்கத்துக்கு இருக்கும் பீதியின் அறிகுறியே இதுவாகும்.

இன, மத வேறுபாடுகள் கடந்து இலங்கைச் சமூகத்தின் சகல பிரிவினரையும் கவர்ந்த கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சி அரசாங்க மாற்றம் ஒன்றை வேண்டிநின்றது. ஆனால், ஜனாதிபதியைத் தவிர மற்றும்படி முன்னைய அரசாங்கத்தில் இருந்த பெரும்பாலானவர்களே தற்போதைய அரசாங்கத்திலும் அங்கம் வகிக்கிறார்கள். ஊழல் நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் ஊடகங்களில் நிறைந்து கிடக்கின்றன. ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரியவில்லை.

முன்னைய ஜனாதிபதியின் கீழ் இருந்ததைப் போன்றே வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூலும் இல்லாத நடவடிக்கைகளும் தண்டனையின்மையும் தொடரவே செய்கின்றன.

இதற்கு உதாரணங்களாக கேள்விப்பத்திரங்கள் கோராமல் அவசரகால மின்சக்தி கொள்வனவு, குடியுரிமைச் சட்ட மீறல்கள் தொடக்கம் அரசாங்க உறுப்பினர்கள் தங்கக்கடத்தலில் ஈடுபடுவது வரை பல முறைகேடுகளை கூறமுடியும். நோயாளிகளுக்கு மரணத்தை விழைவித்த மருந்துவகைகள் கொள்வனவு தொடர்பிலான ஊழல் நிலைவரங்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதை காட்டுகின்றன. இந்த ஊழல் நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவைக்கட்டி அவற்றில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூற வைத்தால் அரசாங்க தலைவர்களின் உறுதிமொழிகளில் மக்களுக்கு ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

### முன்னோக்கிய பாதை

ஒரு ஜனநாயகத்தில் அரசாங்கம் ஒன்றை மாற்றுவதற்கான வழி தேர்தல்களே. மாற்றத்துக்கான இந்த இயந்திரத்தின் மின்விசையை அரசாங்கம் நிறுத்திவைத்திருக்கிறது. அரசாங்கத்தை பதவி விலகுமாறு நிர்ப்பந்திக்க மக்கள் ஐக்கியப்பட்டு நிற்கிறார்கள் என்றால் சாத்தியமானளவு விரைவாக தேர்தல்களை நடத்தவேண்டும். அவ்வாறு நடைபெறவில்லை.

மாறாக உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. நிதியில்லை என்று அரசாங்கம் அதற்கு காரணம் கூறியது. இந்த நிலைவரம் அரசாங்கத்தில் இருந்து வெளியேறவேண்டியவர்கள் என்று மக்களால் அம்பலப்படுத்தப்பட்டவர்கள் மீண்டும் அரசியலில் மைய அரங்கிற்கு வருவதற்கு கால அவகாசத்தையும் இடத்தையும் கொடுத்திருக்கிறது.

ஜனநாயக தேர்தல்களில் மக்கள் வாக்களிப்பதற்கு வாய்ப்பை வழங்காமல் சட்டத்துக்கு புறம்பான முறையில் உளளூராட்சி தேர்தல்களை ஒத்திவைத்ததன் மூலமே அரசியல் சமுதாயத்தில் உறுதிப்பாடு வந்திருக்கிறது. நாட்டில் தற்போது காணப்படும் உறுதிப்பாடும் மந்தநிலையும் புயலுக்கு முன்னரான அமைதியாக மாறாமல் இருக்கவேண்டுமானால் மக்களுக்கு மாற்றத்தை கொடுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் தொடங்கவேண்டியது அவசியமாகும்.

அண்மைக்காலமாக ஜனாதிபதி விக்கிரமசிங்க தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்துக்கான தேவை குறித்து வலியுறுத்தி வருகிறார். இதற்காக அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது மற்றும் உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பது குறித்து அவர் யோசனைகளை முன்வைத்திருக்கிறார். ஆனால் இன்னமும் இவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. எதிர்காலத்தில் ஒரு வருடம் அல்லது இரு வருடங்களில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமே இருக்கிறது போன்று தெரிகிறது.

அதேவேளை, ஜனாதிபதியின் யோசனைகள் சர்ச்சையை மூளவைத்திருக்கின்றன. எல்லாமே தேர்தல்களுக்கான கண்துடைப்பு என்று சந்தேகிக்கும் மக்கள் மத்தியில் வேறுபாடுகளை அதிகரித்திருக்கின்றன.

அண்மையில் வடக்கில் மடு கத்தோலிக்கத் தேவாலயத்துக்கு சென்ற ஜனாதிபதி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். ஆனால் கத்தோலிக்க செய்திப் பத்திரிகையான 'ஞானார்த்தபிரதீபய' அதன் ஆசிரிய தலையங்கத்தில், "தேர்தல் வாக்குறுதிகள் நிறைந்த அரசியல் பேச்சுக்கள் மதத் தலங்களுக்கு பொருத்தமானவை அல்ல என்பதை நாட்டின் முதல் குடிமகன் தெரிந்திருக்கவேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறது. மீட்சி இடம்பெற வேண்டுமானால் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையில் நம்பிக்கை அவசியமாகும்.

எதிர்காலத்துக்கான வாக்குறுதிகளை வழங்குவதை விடுத்து சமகாலத்தில் அரசாங்கம் மாற்றங்களை நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியம். நல்லிணக்கத்தைப் பொறுத்தவரை, மாகாணங்கள் அதை தொடங்கவேண்டும் என்று எதிர்பார்த்தலாகாது. அதை மத்தியில் இருந்தே தொடங்கவேண்டும். மத்தியமயப்படுத்தப்பட்ட அரச இயந்திரம் சமத்துவமான கடப்பாட்டுடன் சகல இனங்களுக்கும் மதங்களுக்கும் சேவை செய்யக்கூடியதாக அதை இனநீக்கம் ( De - ethnicise) செய்யவேண்டும்.

மற்றைய சமூகங்களுடனான உறவுகளைப் பொறுத்தவரை 'வாழு வாழவிடு' என்ற மனநிலை பாடசாலை சிறார்கள் மற்றும் அவர்களின் ஆசிரியர்கள் மத்தியில் இருப்பதாக சமூக மட்டத்தில் அவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் ஆய்வொன்றின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாக அரசியல் ஒழுங்கின் மீது அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்பதையும் ஆய்வு வெளிக்காட்டியிருக்கிறது.

அரசியலில் உள்ளவர்கள் தேசிய ஒருங்கிணைப்பையும் நல்லிணக்கத்தையும் தோற்றுவிப்பதை விடுத்து இன, மத வேறுபாடுகளை தங்களது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துகிறார்கள் என்று அந்த மாணவர்களும் ஆசிரியர்களும் நம்புகிறார்கள்.

அரசாங்கத்திடமிருந்து நடவடிக்கைகளே எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க சேவைகளைப் பெறவருபவர்களுக்கு உத்தியோகபூர்வ ஆவணங்களின் மொழிபெயர்ப்புகளை உடனடியாகக் கிடைக்கச்செய்வதைப் போன்ற சிறிய நடவடிக்கைகள் கூட அரசாங்கம் தான் சொல்வதை செயலில் காட்டுவதில் நேர்மையாக இருக்கிறது என்ற நம்பிக்கையை கட்டியெழுப்ப உதவும். ●

# நீதிமன்றத்துக்கு அழுத்தம் ஏற்படுத்தவில்லை ஆலோசனைக்கு அமையவே செயல்பட்டேன்!

## சபாநாயகர் மகிந்த யாப்பா

கொழும்பு,ஓக.23

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சபாநாயகர் சபையில் விடுத்த அறிவிப்பு நீதிமன்றத்துக்கும் நீதிமன்றத்தின் செயல்பாடுகளுக்கும் அழுத்தம் பிரயோகித்துள்ளது. தேசிய கடன் மறுசீரமைப்பு யோசனை சட்டமூலமல்ல ஆகவே, அதை ஏன் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் சபாநாயகரை நோக்கி கேள்வி எழுப்பினார்கள்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நீதிமன்றத்துக்கு ஒரு போதும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. சட்ட ஆலோசனைகளை பெற்றே தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான அறிவிப்பை சபையில் முன்வைத்தேன். ஆகவே, அறிவிப்பு குறித்து எவரும் உயர்நீதிமன்றத்தை நாடலாம் - என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற அமர்வின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட சபாநாயகர் மேலும் கூறுகையில்,

ஒழுங்கு பிரச்னை ஒன்றை முன்வைத்து உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின்



தலைவர் விமல் வீரவன்ச தேசிய கடன்களை மறுசீரமைக்கும் யோசனையை அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது.

அது சட்டமூலமல்ல தேசிய கடன் மறுசீரமைக்க எடுத்த தீர்மானத்தால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என தொழிற்சங்கத்தினர் உயர்நீதிமன்றத்தை நாடினார்கள்.

இவ்விடயம் குறித்து பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பினர் கேள்வியெழுப்பிய போது "பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது என நீங்கள் (சபாநாயகர்) சபையில் குறிப்பிட்டீர்கள்.

நிறைவேற்றப்பட்டது சட்டமூலம் என்றால் நீங்கள் (சபாநாயகர்) கூறுவது சரி ஆனால் யோசனை ஒன்றை நிறைவேற்றி விட்டு அதை சட்டம் என்று குறிப்பிட முடியாது.

அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனையை நீதிமன்றத்தில் ஏன் சவாலுக்குட்படுத்த முடியாது.தேசிய கடன் மறுசீரமைப்பு, ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஏற்படும் பாதிப்பை ஏன் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாது ? என சபாநாயகரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன இந்த விடயம் தொடர்பில் கடந்த பாராளுமன்ற அமர்வில் கேள்வி எழுப்பினீர்கள். நான் பதிலளித்தேன். உரிய சட்ட ஆலோசனைகளுக்கு அமையவே நான் அந்த அறிவிப்பை பாராளுமன்றத்தில் விடுத்தேன். ஆகவே இவ்விடயம் தொடர்பில் தொடர்ந்து பேசுவது அவசியமற்றது என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ ஆளும் தரப்பினர் ஒரு யோசனையை கொண்டு வந்தால் அதை பாராளுமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியாதா ? என்று குறிப்பிடுகின்றீர்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் எவரும் உயர்நீதிமன்றத்தை நாடலாம் அதற்கு தடையில்லை என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நீங்கள் (சபாநாயகர்) சபைக்கு விடுத்த அறிப்பை தொடர்ந்து ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் இரத்துச் செய்தது.

பாராளுமன்றத்தில் நீங்கள் (சபாநாயகர்) விடுத்த அறிவிப்பு நீதிமன்றத்துக்கும், நீதிமன்றத்தின் செயற்பாட்டுக்கும் அழுத்தம் பிரயோகித்துள்ளது. பாராளுமன்றத் துக்கும்,நீதிமன்றத்துக்கும் இடையிலான இடைவெளி தீவிரமடைந்துள்ளது என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் நீதிமன்றத்திற்கும், நீதிமன்றத்தின் செயல்பாட்டுக்கும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. இவ்விடயம் குறித்து நீங்கள் நீதிமன்றத்தை நாடுங்கள் - என்றார்.

